Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நியூ பிரியங்கா
அற்புதமான வேலைப்பாடுடைய
அதி உன்னத தங்க நகைகளுக்கு
அழகு மங்கையர் நாடுவது
நியூ பிரியங்கா
177A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 2148

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 17 ஆம் நாள் (03.10.2002) வியாழக்கிழமை இதழ் : 03

# காரைநகர், பொன்னாலை, மண்டைதீவில் கடற்படையினர் கட்டுப்பாடுகளில் தளர்வு!

## யாழ். ஆயர், அமைச்சர் மகேஸ்வரன் ரியர் அட்மிரல் வீரசேகரவுடன் சந்திப்பு

(நமது நிருபர்)

**மண்டைதீவுப் பகுதியில் பொதுமக்கள் மீண்டும் குடியமர்வதற்கு ஏற்ற வகையில் அப்பகுதியிலுள்ள 50 வீடுகளிலிருந்து கடற்படையினர் விலகிக் கொள்வார்கள் என்றும் பொன்னாலை, காரைநகரிலுள்ள பிரதான வீதிகள் சில இன்றுமுதல் மீண்டும் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்படுமென்றும் கடற்படை உறுதியளித்திருப்பதாக இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.**

வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுடன் நேற்றுமாலை காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் வைத்துத் தானும், யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகமும் நடாத்திய சந்திப்பின் பின்னர் இந்த முடிவுகளுக்கு கடற்படை இணங்கியதாக அமைச்சர் மகேஸ்வரன் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - மண்டைதீவு இறங்குதுறையை கடற்றொழிலாளர் பயன்படுத்தவும் கடற்படை இன்று முதல் அனுமதியளிக்கும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாம் நாளாக உண்ணாவிரதம்

(கொழும்பு நிருபர்)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று இரண்டாவது நாளாகவும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சில கைதிகள் நீராகாரத்தை அருந்தாமல் உண்ணாவிரதம் இருப்பதாகவும் தெரியவருகிறது.

### விண்ணாணம் விநாசியர்



உவவுக்கு பகல் கனவுகளைக் காணுறதே தொழிலாப் போச்சுது...!

## புலிகளின் நீதிநிர்வாகத் திறன் ஜேர்மன் நீதிபதிகள் குழு பாராட்டு

(கிளிநொச்சி)

ஜேர்மனியிலிருந்து வன்னி வந்துள்ள நீதிபதிகள், சட்டத்தரணிகள் குழுவொன்று - தமிழீழ நீதி நிர்வாக சேவையின் செயற்பாட்டு ஒழுங்கமைவிற்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இக்குழுவினர் நேற்றுக்காலை கிளிநொச்சி வந்தடைந்தனர். விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா மற்றும் தமிழீழ நீதிமன்றங்களின் நீதியாளர்களையும் சட்டவாளர்களையும் இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது தமிழீழ நீதிமன்றங்களின் கட்டமைப்புக்கள், மற்றும் செயற்பாடுகள் பற்றிக் கேட்டறிந்து அவர்கள் வியப்படைந்தனர்.

வட-கிழக்கில் ஏற்பட்டுள்ள இயல்பு நிலை பற்றி நேரடியாகப் பார்த்தறிந்து கொள்வதற்காக வந்துள்ள இக்குழுவினர், நாளை யாழ்ப்பாணம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை புலிகள் கைவிட்டால்தான் பேசுக!

### ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் முழுமையாக ஆயுதங்களை ஒப்படைத்த பின்னரே அவர்களுடன் முழுமையான பேச்சுவார்த்தையில் அரசு இறங்க வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாக அவரது ஊடகப் பேச்சாளர் கரீம் பீரிஸ் தெரிவித்தார். நேற்று செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளுடன் அதிகாரப்பகிர்வு, நிர்வாகம் தொடர்பாக அரசு பேச்சுக்களை நடத்த முன் அவர்கள் நிராயுதபாணிகளாக்கப்படல் வேண்டும் என்றார்.

நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் போது புலிகள் ஆயுதங்களுடன் இருப்பது பல்வேறு எதிர்விளைவுகளை ஏறபடுத்தும் என ஜனாதிபதி கருதுவதாகவும், இதனாலேயே புலிகள் முதலில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்துகொண்ட 12 சிறுவர்கள் புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட பன்னிரண்டு சிறுவர்கள் மீண்டும் அவர்களது பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மிக அண்மையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டவர்களில் சிறுவர்களாகக் காணப்பட்ட ஒன்பது பேர் உட்பட மேலும் மூவருமாக மொத்தம் பன்னிரண்டு சிறுவர்கள் இவ்வாறு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளும், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி களும் கலந்துகொண்டனர்

ஒப்படைக்கப்பட்டவர்களில் பாடசாலை மாணவர்களாகக் காணப்பட்ட எட்டுப் பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-சே)



சிறைவாசம் முடித்து விடுதலையாகியது இரத்த உறவு; நிறைபாசம் விழிகளில் தேக்கியபடி ஏக்கத்துடன் இந்த உறவு.

## மனிதாபிமான ரீதியில் கைதான படையினரில் ஒருவர் நேற்று விடுதலை

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை வில்கம் விகாரை காட்டுப் பகுதியில் அண்மையில் புலிகளால் கைதான ஏழு படையினரில் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். விடுதலையான இப் படைவீரரின் மகன் புற்றுநோயினால் அவதியுறுவதால் அவருக்கு இரத்தம் வழங்கும் பொருட்டு மனிதாபிமானரீதியில் புலிகளால் இச்சிப்பாய் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கும்புறுப்பிட்டி சனசமூக நிலைய முன்றலில் வைத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி மில்லர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழுப் பிரதிநிதி அப்துல்கான் ஆகியோர் முன்னிலையில் இச்சிப்பாய் புலிகளின் திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக்கினால் விடுவிக்கப்பட்டார்.

மிகுதியான ஆறு படையினரும் முள்ளிபொத்தானையில் கைதான இரு புலிகளும் விடுவிக்கப்பட்டாலே விடுதலையாவர் என்றும், எனினும் இவர்களை சர்வசே செஞ்சிலுவைக் குழுவினர் சென்று சந்திக்க அனுமதிக்கப்படும் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## பள்ளி மாணவியை துரத்திய சிப்பாய்; பட்டப்பகலில் மட்டுவிலில் சம்பவம்!

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் பாடசாலை அதிபர் புகார்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி ஒருவரைத் துரத்திச் சென்றதாக மட்டுவில் இராணுவ முகாம் சிப்பாய் ஒருவருக்கு எதிராக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கனகம்புளியடிச் சந்தியடியால் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவரை இராணுவச் சிப்பாய் அழைத்தார். மாணவி நிற்காமல் தொடர்ந்து செல்லவே குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் மாணவியைத் துரத்திச் சென்றுள்ளார். பின்னர் வீதியில் சனநடமாட்டத்தை அவதானித்த சிப்பாய் தொடர்ந்து துரத்திச் செல்வதை நிறுத்திக் கொண்டார். பின்னர் வீதியில் சென்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் விடுதலைக்கு அமைச்சரவை அங்கீகாரம் தேவை

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் ஆகியவற்றின்கீழ் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படாமலும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முடியாமலும் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக விருந்தால் அமைச்சரவைத் தீர்மா

(10ஆம் பக்கம் பார்க்க)

பெண்களுக்காக
சிநேகிதியே...!

தாச்சிமுதல் கிரிக்கெட் வரை
ஊரெழுமுதல் உலகு வரை
விளையாட்டு அரங்கம்

அறிவின் ஊற்றாய்
மாணவர் மலர்

உலகின் எட்டுத் திக்கிலிருந்தும்
அதிரடித் தகவல்கள்

உங்கள் வீட்டுச் சுட்டிகளுக்கு
கும்மாளமிடும்
சிறுவர் அரங்கம்

நாள்தோறும் பலன் சொல்லும்
இன்றைய நாள் இனியநாள்

சந்தை நிலைவரத்திற்கு
தொழில்மலர்

கூடச்சுட உள்நாட்டுச் செய்திகள்

காதல் முதல் கல்லூரிகள்வரை
முத்தூச் சிதறல், பஞ்சுவை அரங்கம்

குளிர்மைதரும் நிலவின் ஒளியாய்
இலக்கியச்சோலை

ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு சிறப்பிதழ்
இரண்டு பக்கங்கள் நிறைய

பலதையும் ஆராயும்
வி.ஐ.பி. விருந்தினர் பக்கம்

எல்லாவற்றையும் தரும் ஒரேயொரு பத்திரிகை
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு

# வன்னியிலிருந்து திரும்பி மீளக்குடியமர விரும்பாதவர்களுக்கும் கொடுப்பனவு !

## பிரதமரின் செயலரிடம் கோரிக்கை

(கிளிநொச்சி நிருபர்)

வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்து, சொந்த இடங்களில் மீளக்குடியமர விரும்பாது, வன்னியில் குறிப்பாக கிளிநொச்சியில் வாழ விரும்பும் மக்களுக்கு நிலம் வழங்கல், மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கல் ஆகியவை தொடர்பாக நடைமுறையொன்றைக் கொண்டு வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனிடம் கிளிநொச்சி அரச அதிபர் கோரியுள்ளார்.

இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்கள், தமக்குரிதான அவணங்களுடன் கூடிய நிலங்களில் மீளக்குடியமர்ந்தால்தான் மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படுவது தற்போதய வழமையாகும்.

கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து வந்து மீள தமது இடங்களுக்கு செல்ல விரும்பாதோருக்கு இந்த கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. இதனால் இவர்களுக்கான ஒரு நடைமுறையை கொண்டு வர பிரட்மன் வீரக்கோனிடம் கோரப்பட்டுள்ளது.

## முடிவுகளுக்கு அங்கீகாரமில்லை

யாழ்.பல்கலைக்கழக இறுதி யாண்டு கலைமாணி பரீட்சை முடிவுகள் மூதவையினால் அங்கீகரிக்கப்படாமையினால் முடிவுகளை வெளியிடவேண்டாம் என பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

மூதவையின் அங்கீகாரம் இன்றியே பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் சித்தி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் இடப்பட்டதாக அவர் தெரிவித்தார். இதனால் இன்று நமது ஈழநாட்டில் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வெளிவரவில்லை.

### 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்

## மேலதிக மொழி அறிவு புள்ளி வழங்கப்படும்

(மானிப்பாய்)

தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை அறியவும் சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியை அறிந்து கொள்ளும் நோக்கிலும் அடுத்த ஆண்டு முதல் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக மொழி அறிவுப் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

தமிழ் மாணவர்களுக்கு சிங்கள அரிச்சுவடி பற்றியும், சிங்கள மாணவர்களுக்கு தமிழ் அரிச்சுவடி பற்றியும் மேலதிகமாக மொழி அறிவுப் பாடம் போதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பரீட்சையில் இதற்கு மேலதிகப் புள்ளிகள் வழங்குவதென அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மீன் சந்தையாகிவிட்ட ஆனைக்கோட்டைச் சந்தி!

கடந்த சில காலங்களாக ஆனைக்கோட்டைச் சந்தியை அண்டிய பகுதியில் பிற்பகல் வேளையில் மீன் சந்தை கூடி வருகிறது. அங்கு மக்கள் மீன் வாங்கவும் விற்கவும் பெரும் திரளில் கூடி நிற்கின்றனர். வீதியால் செல்லும் வாகனங்களைப் பொருட்படுத்தாது பொதுமக்கள் நடந்து கொள்வதால் விபத்துக்களுக்கு வழிவகுப்பதுடன் அதனை அண்டியுள்ள பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சிறு விளம்பரம்

வரலாறு

மயில் வாகனப்புதல்வரின் யாழ்ப்பாணவைபவமாலை, முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாண சரித்திரம் ஆகிய நூல்கள் கலாநிதி க. குணராசாவின் மீள் வாசிப்புடன் வெளிவந்துள்ளன. ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம் புத்தக சாலைகளில் பெறலாம். (சி-027)

# கொக்குவிலில் மிதிவெடி சிறுவன் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் காளி கோவிலடிப் பகுதியில் நேற்று நண்பகல் மிதிவெடியில் சிக்கிய சிறுவன் ஒருவன் தனது காலை இழந்துள்ளார்.

சண்முகராசா றொசாந்தன் (8) என்ற சிறுவனே தனது காலை இழந்தவராவார். புதிதாக வாங்கிய காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த போதே இச்சிறுவன் மிதிவெடியில் சிக்கியமை குறிப்பிடத்தக்கது. (கோ)

# யாழ்.புற்று நோயாளருக்கு சுவிஸ் அமைப்பு உதவும்

(மானிப்பாய்)

இலவச மருத்துவ உதவி வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு வரும் சுவிஸ்நாட்டு உதவி அமைப்பான 'நீரோஜ்ஜா' புற்று நோயாளர்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தகவல் திரட்டப்பட்டு வருகிறது.

இந்த மருத்துவ உதவித் திட்டத்தில் நோயாளர்களுக்கு இலவசப் போக்குவரத்து, தங்குமிட வசதி மற்றும் இவர்களுக்குரிய மருந்து வகைகள் வைத்தியசாலையில் பெற முடியாத பட்சத்தில் அதனை வெளியிடங்களில் பணம் கொடுத்து வாங்க வேண்டிய தேவையிருப்பின் அம் மருந்துகளை உரிய இடத்திலிருந்து பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகள் இவ் உதவித் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

இதற்கான பூர்வாங்க வேலைகள ஆரம்பிக்கப்பட்டு இவை தற்போது பூர்த்தி அடையும் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் ஆரம்பச் செயற்பாட்டு மையங்கள் ஊரெழு பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையிலும் கச்சேரி நல்லூர் வீதி, மற்றும் மானிப்பாய் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தகக் கடையினுள் சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி)

கண்டிவீதி, சங்கத்தானையில் புத்தக விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

கடைக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு கடைக்குள் இருந்த துவிச்சக்கர வண்டி ஒன்று களவாடப்பட்டிருந்தது. எனி னும் அங்கு வேறு எந்தப் பொருட்களும் களவாடப்படவில்லை.

பூட்டு உடைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் கடையின் அருகில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (29)

# எரித்த குப்பைக்குள் ஷெல் வெடித்தது

(சாவகச்சேரி)

சங்கத்தானை முருகமூர்த்தி கோவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியவில் குப்பை எரித்த போது அதனுள் இருந்த ஷெல் ஒன்று வெடித்ததில் வீடு ஒன்று சிறு சேதத்துக்கு உள்ளானது.

இடப் பெயர்வின் பின்னர் வீட்டு வளவினை துப்புரவு செய்யும் பணியல் ஈடுபட்டோர் அப்பகுதியில் உள்ள குப்பைகளை எரித்தபோதே அதனுள் இருந்து ஷெல் வெடித்தது (29)

# அக்கராயன் ஆஸ்பத்திரி தரமுயர்த்தப்படும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயனில் உள்ள கிராமிய மருத்துவமனை சுற்றயல் கூறு **(Pheriperal Unit)** மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படவுள்ளது. அக்கராயன் கிராமிய மருத்துவமனை 1996 இராணுவ நடவடிக்கையால் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இடம்பெயர அன்று முதல் மாவட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது இதனால் சத்திர சிகிச்சைக் கூடம் எக்ஸ்றே வசதியுடன் விரிவான அக்கராயன் கிராமிய மருத்துவமனையை தற்போதுள்ள மாவட்ட மருத்துவமனை வசதிகளுடன் இணைத்து சுற்றயல் கூறு மருத்துவமனையாக உயர்த்தப்படவுள்ளது.

அதே சமயம் கிளிநொச்சி நகரில் தள மருத்துவமனை அல்லது பொது மருத்துவமனையைக் கட்டியெழுப்ப திட்டமிடப்படுகின்றது. கிளிநொச்சி நகரில் மருத்துவமனையைக் கட்டியெழுப்ப எழுபது கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. கிளிநொச்சியின் புதிய நகரத் திட்டமிடலின் படி மருத்துவமனை கண்டி வீதி 156 ஆம் கட்டை உதிர வேங்கையடியில் 25 ஏக்கர் பரப்பில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

### வலிகாமம் வலய

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றைய ஆட்டத்தில் மோதும் அணிகள்

(மானிப்பாய்)

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இன்றைய ஆட்டங்கள்:

16 வயதுப் பிரிவு

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு

சுழிபுரம் விக்டோரியா எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லரி

இணுவில் மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு

வசாவிளான் மத்திய மகா வித்தி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா

அராலி சரஸ்வதி வித்தி. எதிர் அருணோதயாக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பி.ப.2.30 மணிக்கு

இளவாலை மெய்கண்டான் எதிர் சுழிபுரம் விக்டோரியா

வசாவிளான் மத்தி எதிர் ஸ்கந்த வரோதயா

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் பி.ப.2.30 மணிக்கு

சண்டிலிப்பாய் இந்து எதிர் மூளாய சைவப்பிரகாசம்

யூனியன் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. (43)

# வட - கிழக்கில் கடல் வலயத் தடை இனி நீக்கப்படுவதே சாலச் சிறந்தது!

## மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் அப்துல் காதர் நமது ஈழநாட்டுக்குப் பேட்டி

(நமது நிருபர்)

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சந்தேகங்கள் அகன்றுள்ள நிலையில், கடல் வலயத் தடைகள் நீக்கப்படுவதுதான் சாலச்சிறந்தது என மீன்பிடி வளத்துறை பிரதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உப தலைவருமான மொஹிதீன் அப்துல் காதர் தெரிவித்தார்.

'நமது ஈழநாட்டுக்கு' இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் புரிவதற்கான வசதிகளை எமது அமைச்சு செய்துகொடுக்கும். கடல் வலயத்தடைகள் நீக்கப்பட வேண்டியதன் அவசியம் பாதுகாப்பு அமைச்சிடம் என்னால் எடுத்துக்கூறப் பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மீனவர்கள் இன்னமும் திறந்த வெளிச்சிறைகளில் வாழும் கைதிகள்போல வாழ வேண்டிய தேவையில்லை. இருபது வருடங்களுக்குப்பின்னர் ஏற்பட்டுள்ள சமாதானம் மீனவ சமுதாயத்தினருக்கும் ஒளிமயமான வாழ்வைத் தரக்கூடியதாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மீனவர்களுக்கும் மீன்பிடி அமைச்சின் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அடையாள அட்டை இலங்கையில் மட்டுமன்றி இயற்கை அனர்த்தங்களால் பிறநாட்டுக் கடலில் நுழைகின்றபோதும் பயன்படுத்தத்தக்க வகையில் பெறுமதியானதாக இருக்கும்.

அத்துடன் இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி மீனவர்கள் தமக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள், வள்ளங்களை கொள்வனவு செய்வதற்கும் கடனுதவிகளைப் பெறவும் வாய்ப்பாக இருக்கும் என்றும் பிரதி மீன்பிடித்துறை அமைச்சர் மொஹிதீன் அப்துல் காதர் தெரிவித்தார்.

## த.வி.கூட்டணியின் கூட்டம் இன்று

(பண்டத்தரிப்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கூட்டம் இன்று பி.ப. 5.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள தலைமைக் காரியாலத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினர் உறுப்பினருமான இரா.சம்பந்தனும் கலந்து கொள்ளவுள்ளார்.(43)

## ஜனாதிபதி மாளிகைப் பகுதி மீண்டும் பாதுகாப்பு வலயமாகிறது!

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றுவதற்கு தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக மாநாடு ஒன்று நடைபெற்றிருக்கிறது.

ஜனாதிபதியின் செயலாளர் பால பெத்தபெண்டி தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலின்போது ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்தால் சாதாரண பொதுமகன் ஒருவரால் அடிப்படை மனிதஉரிமைமீறல் என வழக்குத்தாக்கல் செய்வதற்கு சந்தர்ப்பம் இருப்பது குறித்து சுட்டிக் காட்டப் பட்டிருந்தது.

ஆனால் இந்த பாதுகாப்பு வலய பிரகடனத்தை பயங்கரவாதத் தடைச சட்டத்தின் கீழ் வெளியிடலாம் என ஜனாதிபதி செயலகம் சார்பில் கலந்து கொண்டோரால் யோசனை தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இனிப் பயன்படுத்தப் போவதில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகள் திருமலை மேல் நீதிமன்றில் துரிதமாகத் தள்ளுபடி!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் பல, வேகமாக தள்ளுபடி செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாட்களில் மட்டும் பல வழக்குகள் இவ்வாறுதள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. சட்டநுணுக்க அடிப்படையில் பலவீனமாக இருந்த வழக்குகளே இவ்வாறு தள்ளுபடி செய்யப் பட்டிருக்கின்றன.

இதேவேளை, கடந்த மாதம் 30ஆம் திகதி திருகோணமலை மேல நீதிமன்ற நீதிபதியாக என்.ஆர். இராமச்சந்திரன் பதவியேற்றுள்ளார்.

இவர் முன்னர் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## மயிலிட்டி காசநோய் வைத்தியசாலைக்கு வைத்தியர் இல்லை; ஊழியர் பற்றாக்குறை

(வலி.கிழக்கு)

மயிலிட்டி காசநோயாளர் வைத்தியசாலை போதியளவு ஊழியர்கள் இன்றி பல சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றது.

யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து தற்போது கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இயங்கிவரும் இவ்வைத்திய சாலைக்கு தனியாக ஒரு வைத்தியரை நியமிக்காததால் கோப்பாய் அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியே இவர்களையும் பார்வை யிடவேண்டியுள்ளது.

இந்நிலையில் இயங்கும் வைத்தியசாலைக்கெனத் தனியான நிலையில் வைத்தியர், தாதியர்கள் மற்றும் ஊழியர்களினதும் பற்றாக்குறையினால் தற்போது இங்கு சிகிச்சை பெற்றுவரும் ஆண், பெண் காசநோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர் கொள்வதாகவும் பெண்கள் விடுதிக்கெனப் பொறுப்பாக இருந்த பெண் பரிசாரகரும் பிரசவ விடுமுறையில் சென்றமையால் மூன்று ஆண் பரிசாரகர்களுடனும் 4 ஊழியர்களுடனும் சிரமத்தின் மத்தியில் இயங்குவதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (79)

## இப்படியும் நடக்கிறது மோசடி

## போலி ஆவணங்கள் மூலம் பாரிய மரங்கள் தறிப்பு!

(நாவற்காடு)

பாரிய மரங்களை தறிப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ள இவ்வேளையில் வரணிப்பகுதியில் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மரங்கள் தறித்து எடுத்துச் செல்லப்படுகிறது இதேசமயம், சைக்கிளில் வரும் வியாபாரிகள் தனியார் காணிகளினுள் புகுந்து வேம்பு, பூவரசு போன்ற மரங்களைத் தறித்தெடுத்துச் செல்கின்றனர். இவர்கள் ஒரு குழுவாகச் சென்று இவ்வாறு செயற்படுவதால் காணி சொந்தக்காரர்கள்கூட இவர்களை தடுக்க அஞ்சுகின்றனர்.(92)

## முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு தேவையா? தேசிய ஐக்கிய முன்னணி கிழக்கில் கருத்துக்கணிப்ப

(கொழும்பு நிருபர்)

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுகின்றபோது, முஸ்லிம்களுக்குத் தனியான அலகு ஒன்று தேவையானதா? என்பது குறித்து தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) கருத்துக் கணிப்பினை மேற்கொண்டுவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்கள் மத்தியிலேயே இக்கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுவருகின்றது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித்த தலைவர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் ரவூப் ஹக்கீமுக்கும் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இடையில் இணக்க நிலை உருவாகி வந்த சூழலில் முஸ்லிம்களுக்குத் தனியான அலகு தொடர்பாக பிணக்குகள் ஏற்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய் வைத்தியசாலையில் புதிய விடுதி அமைக்கும் பணி போதிய நிதியின்றி நிறுத்தம்

(வலி. கிழக்கு)

கோப்பாய் வைத்தியசலைக்கு புதிய விடுதியொன்றை அமைக்கும் பணி கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதற்குரிய நிதி முழுமையாக கிடைக்காமையால் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

புதிய விடுதிக்கான அரைப்பகுதி நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் போதிய நிதியின்மையால் பணிகளை பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாக தெரிய வருகின்றது.

மயிலிட்டி காசநோய்கள் சிகிச் நிலையமும் இவ்வைத்தியசா யில் இயங்குவதால் இங்கு பெ இடநெருக்கடி நிலவுகின்றது.

கோப்பாய் அரசினர் வைத் சாலையில் மார்புநோய் சிகிச் விடுதி அமைப்பதற்கான திட்டங்க இந்த விடுதி நிர்மாணம் தாம அடைவதால் நடைமுறைப்படு முடியாதநிலை தோன்றியுள்ளது (

## சின்னஞ்சிறு செய்திகள்

### 'ஊற்று' உதவி

(நாவற்காடு)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வன்னியிலிருந்து வந்து மீளக் குடியமர்ந்த பாடசாலை மாணவர்களிற்கு 'ஊற்று' நிறுவனத்தால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

அவ்வப்பகுதி கிராமசேவையாளர் ஊடாக விபரங்களைப் பெற்று அவர்களூடாகவே இவை வழங்கப் பட்டுகின்றன. (92)

### இளைஞர் மன்ற கூட்டம்

(பாண்டியன்தாழ்வு)

பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய இளைஞர் மன்றத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆக்கத்திறனும் ஊக்கமும் உடைய இளைஞர் யுவதிகளை புதிதாக இணைத்து மன்றத்தின் கரங்களை பலப்படுத்துமாறு பங்குத்தந்தை அருட்திரு. பி.எம்.இம்மானுவல் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார். (65)

### முதியோர் தினவிழா

(காரைநகர்)

காரைநகர் சைவ மகா சபை மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் முதியோர் தினவிழா உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். (52)

### கண்காட்சி

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தினர் நடாத்தும 'மனித உன்னதம்' கண்காட்சி நாளை 4ஆம் திகதி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### ஊரெழுவில் முதியோர் இல்லம்

(ஊரெழு)

ஊரெழுவில் முதியோர் இல்லம் வெளிநாட்டு நிறுவன உதவியுடன் அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது. கடந்த போர்க்கால சூழலில் அநாதரவாக கைவிடப்பட்ட முதியோர்கள் மற்றும் பிள்ளைகள் இல்லாத, பிள்ளைகளால் கைவிடப் பட்ட எனப் பலதரப்பட்ட முதியவர்களையும் பராமரிக்கும் வகையில் இம்முதியோர் இல்லம் ஒழுங்கமைக் கப்பட்டு வருகின்றது. (96)

### விஞ்ஞான சங்க போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வருடம் தோறும் பாடசாலை மட்டத்தில் நடாத்தும் விஞ்ஞான வினா விடைப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி என்பன எதிர்வரும் 12ம் திகதி நடைபெறவுள்ளது. இது தொடர்பாக விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை இவ் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் உதவிச் செயலாளர், யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், வெளிவாரிப்பட்டப் படிப்புகள் இணைப்பாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இப்போட்டிப் பரீட்சைகள் வலிகாமம், தீவகம் சார்ந்த மாணவர்களுக்கு யாழ்.இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி மாணவர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வடமராட்சி மாணவர்களுக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது (64)

### மூளாயில் சிறுவர் தினவிழா

மூளாய் கூட்டுறவு சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தினரின் சிறுவர் தின நிகழ்வுகள் கூட்டுறவு வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதம விருத்தினர், சிறப்பு விருந்தினர்களாக சிறுவர்களே கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது.

### சுகாதார கருத்தரங்கு

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தினரின் கருத்தரங்கு, செயற்றிட்டங்கள் என்பன இடம்பெற்று வருகின்றன.

எயிட்ஸ், புற்றுநோய் மற்றும் சமூகதொற்று நோய்கள் பற்றிய கருத்தரங்கு இவ்வாரம் சண்டிலிப்பாய் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (39)

## நீதிமன்ற வளவில் நின்ற மோட்டார் சைக்கிள் திருட்டு

(இணுவில்)

யாழ். நீதிமன்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

சங்கானை மதுவரி நிலையத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் நீதிமன்னறத்திற்கு கடமைக்காக சென்றிருந்தபோதே மோட்டார் சைக்கிளை பறிகொடுத்திருக்கின்றார்.

நீதிமன்ற வளவில் இடம்பெ இந்தத் திருட்டுத் தொடர்பாக ய நீதிமன்ற நீதவான் இ.த.விக்னரா வின் கவனத்திற்கு கொண்டு பட்டதையடுத்து, காணாமல் பே மோட்டர் சைக்கிளை கண்டுபிடி நடவடிக்கை எடுக்குமாறு பொல அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப் கப்பட்டிருக்கின்றது. (

## அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் சிலரும் ஆதரவ

### சரத் அமுனுகம கருத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 19வது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துக்கு தமது தரப்பைச் சேர்ந்த சிறுதொகை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் என பொதுசன ஐக்கிய முன்னணி பேச்சாளரும் எம்.பியுமான சரத் அமுனுகம தெரிவித்தார்.

அப்பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கென தனியான அரசியல் அட்டவணையைக் கொண்டுள்ளார்கள். ஆனால் யாப்புச் சீர்திருத்தத்துக்கு ஆகக்குறைந்தது இருபது உறுப்பினர்களின் ஆதரவு தேவையென அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் சிலவேளை இவ்விடயத்தில் தேவையான ஆதரவ திரட்டினாலும் மக்களிடம் அ பிராய வாக்கெடுப்புக்கு எடுத் செல்ல வேண்டும். ஆகவே இப் பொழுது நாங்கள் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறே அதன் பின்னர் எங்களது அ நகர்வை மேற்கொள்வோம் என தெரிவித்துள்ளார். அமுனுகம.

# ஈராக் - ஐ.நா. பரிசோதனைக்குழு உடன்பாட்டை அமெ. நிராகரித்தது!

(வோஷிங்ரன்)

ஈராக்கிய தூதுக்குழுவுக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஆயுதப் பரிசோதனைக் குழுவுக்கும் இடையில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற தீவிரப் பேச்சுக்களையடுத்து எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமெரிக்கா நிராகரித்துள்ளது.



எந்தவிதமான முன் நிபந்தனைகளோ கட்டுப்பாடுகளோ இன்றி ஈராக்குக்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஈராக் இணங்கியுள்ளமை தொடர்பாக பேச்சுக்களின் முடிவில் கூட்டாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கா திணிக்க முற்படும் போரைத் தவிர்க்க ஈராக்கிய இராஜதந்திரம் இயன்றளவு விட்டுக் கொடுத்து, தற்போது நடைமுறையிலுள்ள ஐ.நா தீர்மானத்துக்கு இணங்க பூரண ஒத்துழைப்புடன் செயற்பட இணங்கியிருந்தது என அவதானிகள் தெரிவித்தனர்.

இப்புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாக செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய புதிய தீர்மான வரைவினை ஐ.நா பாதுகாப்புச்சபை அங்கீகரிப்பதன் மூலமே அழுத்தம் மூலம் சாதிக்க முடியும் என்றார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரண்டு நாடுகளும் முன்வைத்திருக்கும் ஆயுதச் சோதனைகளை மேற்கொள்வது தொடர்பான கடுமையான புதிய வரைபுகளை 'வீட்டோ' அதிகாரமுள்ள ரஷ்யா, பிரான்ஸ், சீன ஆகிய நாடுகளுடன் பாதுகாப்புச் சபையின் தற்காலிக அங்கத்துவம் வகிக்கும் பல நாடுகளும் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந் நிலையில் அமெரிக்காவுக்கு வேறு தெரிவுகள் எதுவும் இல்லாத நிலையில் ஒருதலைப்பட்சமாக ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கவே முற்படும் என்றும் இம்முடிவை எடுப்பதில் அமெரிக்க செனட் கடும் தடுப்பு முயற்சிகளைக் காட்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவின் முடிவு மீது பாக். கவலை

(கராச்சி)

பாகிஸ்தானியப் பிரஜைகள் மீதும் அமெரிக்கா கடுமையான குடிவரவு விதிமுறைகளை அமுல்படுத்த தீர்மானித்துள்ளமை தொடர்பாக பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சு, கடுமையான ஏமாற்றமும் கவலையும் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

சர்வதேசப் பயங்கரவாதத்தை ஒழிக்கும் அமெரிக்கத் திட்டங்களுக்கு பாகிஸ்தான் பூரணமாக ஒத்துழைத்து வரும்போது, பாகிஸ்தானியப் பிரஜைகள் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது என்ற விடயத்தையும் அமெரிக்க அரசுக்கு பாகிஸ்தான் சுட்டிக்காட்டியுள்ளது.

## அன்னை தெரேசாவுக்கு புனிதராக பாப்பரசர் பட்டம் வழங்குவார்

(வத்திக்கான்)

அடுத்த வருடம் இளவேனில் காலத்தில் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அன்னை தெரேசாவை புனிதராக பிரகடனம் செய்யவுள்ளார்.



வத்திக்கானில் உள்ள கர்தினால்களும் ஆயர்களும் அன்னை தெரேசாவின் அற்புதத்தை அங்கீகரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அன்னை தெரேசாவின் அற்புதத்தை அங்கீகரிக்கும் ஆணையில் கைச்சாத்திடவுள்ளார்.

1910ஆம் ஆண்டு மஸ்டோனியாவில் பிறந்த அன்னை தெரேசா கல்கத்தாவில் வறிய மக்களுக்காக பணியாற்றி 1997ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காலமானார். மரணமாகி மிகக் குறுகிய காலத்துக்குள்ளாகவே அன்னை தெரேசா புனிதராக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச முக்கியத்துவமான சிக்கலில் பாதுகாப்பு சபையில் முதலாவது கடும்பிளவு!

## ஈராக் விவகாரம் பற்றிப் பிரான்ஸ் கருத்து


(பாரிஸ்)

சர்வதேச ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்துள்ள ஒரு விடயமொன்றில் ஐ.நாவின் பாதுகாப்புச் சபை முதல் தடவையாக கடும் பிளவுக்கு உட்பட்டுள்ளது என்று பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக் மீது அழுத்தத்தைக் கொடுப்பதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் தயாரித்துள்ள புதிய தீர்மான வரைபை ஏற்றுக்கொள்ளாத பிரான்ஸ் அரசு, தான் ஒரு புதிய தீர்மான வரைபைத் தயாரித்துள்ளது. இதற்காக ஐ.நா பாதுகாப்புச் சபையில் தான் ஆதரவு தேட உள்ளதாகவும் இவ்விடயத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் இணங்கி, சமரசம் காண முன்வருவதே சிறந்ததாக அமையும் எனவும் பிரான்ஸ் கருதுவதாக பாரிஸிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அமெரிக்காவின் தீர்மான வரைபு பற்றிக் கருத்து வெளியிட்ட அரபுலீக் தலைவர் அது ஒரு அப்பட்டமான ஆத்திரமூட்டும் ஆவணம் என்றும், தான் ஈராக் மீது தொடுக்கவுள்ள போருக்கு முன்கூட்டியே நியாயம் கற்பிக்க முயலும் அமெரிக்காவின் உபாயமே அது எனவும் கவலை வெளியிட்டுள்ளார்.

## உலகவலம்



இந்தோனேசியாவில் பொலிஸ் நிலையம் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பொலிஸார் பலியாகினர். இம்மோதலில் அகப்பட்டு வீதியில் எரிந்து கொண்டிருக்கும் வாகனம் ஒன்று.

# சதாம் தப்பிப் பிழைப்பாரா? அமெரிக்கா 'அடிக்குமா'?

உள்நாட்டிலும் வெளியுலகிலும் அமெரிக்காவின் ஈராக்கை நோக்கிய இராஜதந்திர நகர்வுக்கும் இராணுவ உபாய நகர்வுக்கும் பாதகமான் தடங்கல்கள் எதிர்பார்த்ததிலும் வேகமாக உருவாகத் தொடங்கிவிட்டன.

அதனது அர்த்தம் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் மூல உபாயமான தனது நாட்டை என்றைக்காவது ஒரு அணுவாயுத வல்லரசாக, முஸ்லிம் உலகின் வல்லமையான ரட்சகனாக மாற்றி விட வேண்டும் என்ற இலட்சியக் கனவுக்கு நீடித்த ஆயுள் கிடைத்துவிடும் என்பதல்ல. ஏக வல்லரசான அமெரிக்காவுக்கு எதிராக ஒரு குட்டி சோவியத் யூனியன் ஒன்று இந்த பூகோளத்தில் உருவாகுவதை ஒரு கணமேனும் அமெரிக்கா சகித்துக் கொள்ளாது என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிபுணர் கொண்டொலிஸா ரைஸ் தெரிவித்துவிட்டார் என்பதனால் மட்டும் சதாமின் உபாயம் பாழாகி விடும் என்று நாம் கூற வரவில்லை. சதாமை எழும்ப முடியாதபடி குப்புற வீழ்த்தி விடவேண்டும் என்பதில் பலம் பொருந்திய இஸ்லாமிய நாடுகள் முன்னணியில் நிற்கின்றன. உதாரணத்துக்கு ஈராக்கின் வரலாற்று பகைமை நாடான ஈரான் இறந்தகாலப் போர் வடுக்களை இன்னமும் தடவிப் பார்த்துக் கொண்டே இருக்கிறது.

அமெரிக்கா அடிக்கப் போகிறது என்ற நிலைமை உருவாகும்போது ஈரானின் தொனி வேறு விதமாக அமையலாம். ஏனெனில் 'தீமையின் அச்சு' எவையென அமெரிக்க ஜனாதிபதி போட்டிருந்த பட்டியலில் ஈராக்கோடு ஈரானையும் சேர்த்திருந்தார். வாசக நெஞ்சங்களுக்கு மேலும் ஒரு விடயத்தைக் கூறிவிட்டு இக் கட்டுரையின் மையப் பொருளுக்குச் சென்று விடலாம். ஈரான் ஒரு இஸ்லாமிய அடிப்படை வாதநாடு. சீர்திருத்தவாதிகள் ஒரு சிலர் முயற்சிகள் மேற்கொண்டிருப்பினும், ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹூசைனோடு பரமவைரித்தனம் கொண்ட இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் நன்கு ஊறிய பழைய பழைமைவாதிகள் சதாமுக்கான கல்லறையின் நீள அகலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர்.

**புவியரங்கன்**

சதாமை அமெரிக்கா மறந்தாலும் (கற்பனையாக நினைத்துப் பார்ப்போம்) அவரது சகோதரப் பகைவர்கள் மறந்து மன்னிக்கத் தயாரில்லை என்று வாசக நெஞ்சங்களுக்கு சொல்லிக் கொண்டு சதாமை ஆட்சியிலிருந்து அகற்றும் அமெரிக்க முயற்சிக்கு இன்று உருவாகிவரும் இடையூறுகளின் முதன்மையான வடிவம் ஐரோப்பாவின் வரலாற்றுப் பாரம்பரியத்தின் தூய்மைத்தனத்துக்குச் சொந்தங் கொண்டாடும் பிரான்ஸ் நாட்டிலிருந்தே தோற்றம் கொள்ளுகிறது.

அதனை வெறுமனே இரண்டு கலாச்சாரங்களினது காலங்காலமான எதிரித்தனத்தின் ஓரம்சமாக மட்டுமே இப்போதைக்குப் பார்க்கலாம். ஐரோப்பிய அமெரிக்கக் கண்டங்களைப் பொறுத்த வரையில் நீண்ட பல நூற்றாண்டுகளாக பிரெஞ்சுக் கலாச்சாரத்துக்கும் வயதில் இளைமையான ஆங்கிலக் கலாச்சாரத்துக்குமிடையில் நீடித்து நிலைத்து வந்த அந்தப் போட்டி நிலை இரண்டு கலாச்சாரங்களினதும் ஒன்றுக்கொன்று போட்டியான கலாச்சாரம் சார்ந்த ஆதிக்க விஸ்தரிப்புக்கான இராணுவப் போட்டியாக, உடனடியாகவோ அல்லது சற்றுக் காலத்தின் பின்னராகவோ மாறிவிடும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. பிரெஞ்சுப் பொருளாதாரம் மற்றும் வர்த்தக நலன்களை அமெரிக்க முன்னெடுப்பில் நகரும் திறந்த பொருளாதாரச் சந்தை அடிப்படைவாத உலகில் நிலைநிறுத்த வேண்டுமென்ற இன்றியமையாத்தன்மையை பிரான்ஸ் நன்றாகவே உணர்ந்துள்ளது.


அதனால் அமெரிக்க - பிரான்ஸ் குரோதம் இராணுவப் பரிமாணங்களை அடையும் என்று பகிடிக்காகத்தானும் இப்போதைக்குக் கூறவே முடியாது.

ஆனால், ஈராக்தொடர்பான மிக இறுக்கமான தீர்மானம் ஒன்றை அமெரிக்கா தான் வரைந்து வைத்துள்ள தீர்மான வரைபின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் மத்தியிலும் தற்காலிக அங்கத்துவ நாடுகள் மத்தியிலும் வலியுறுத்தி ராஜதந்திர மொழியாடல்களை மேற்கொண்ட வண்ணம் உள்ளது.

இந்நிலையில் பிரான்ஸ் தனது சொந்த வரைபு நகல் ஒன்றையும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் மாநாட்டு மேசையில் முன்வைத்து அதற்கூடாக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நிரந்தர அங்கத்துவமுள்ள நாடுகளினதும் தற்காலிக அங்கத்துவமுள்ள நாடுகளினதும் சமரசத்தீர்மானத்தின் அடிப்படையில் அதனையே ஈராக் தொடர்பான புதிய தீர்மானமாக்க வேண்டும் என்று வலியுத்தத் தொடங்கியுள்ளது.

பிரான்ஸின் வரைவு நகலுக்கு ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவிக்குமா என்பது இப்பொழுதுள்ள வினா. ஆனால் ரஷ்யாவும் சீனாவும் அமெரிக்க தீர்மான வரைவுக்கு ஆதரவளிக்க மறுக்கின்றன.

இந்நிலையில் 'அமெரிக்காவுக்கு எதிராக பிரான்ஸ்' என்ற ராஜதந்திர மும்முரங்களினால் வரலாற்றின் ஒரு முக்கிய நிகழ்வாகப் பார்க்கக்கூடிய வகையில் ஐ.நாவின் பாதுகாப்புச் சபை மிகத் தெளிவாகவே இரண்டு பட்டுள்ளது. தனது தீர்மான வரைபே பரிசீலிக்கப்பட்டு தீர்மானமாக்கப்பட வேண்டும். அதுவே ஈராக்மீது கடுமையான அழுத்தத்தைப் பிரயோகித்து பலன்தரத்தக்கது என்று பிடிவாதமான தொனியில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல்.



பிரெஞ்சு ஜனாதிபதி ஜாக் சிராக், ஜேர்மன் தலைவர் கிரஹாட்டுடன் இணைந்து அமெரிக்காவின் காரணங்களை மறுக்கிறார்.

ஈராக் தூதுக்குழுவும் ஐ.நாவின் ஆயுதப்பரிசோதனைக் குழுவும் இரண்டு நாட்களாகப் பேசிக் கண்டனத்தீர்வும் விழலுக்கு இறைத்த நீராகியுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான பிரான்ஸின் இராஜதந்திரம் பலமடைவதற்கு முன்பே, ஒரு தலைப்பட்சமான வேறு முடிவுகளுக்கு அமெரிக்கா செல்லக் கூடுமா? அவ்வாறானால் தனது துணை உபாயங்களில் ஏற்பட்டுவருகின்ற கடும் தோல்விகளை பொருட்படுத்தாமல், தனது மூலஉபாயத்தை அமுல்படுத்துவதற்காக, முற்றிலும் தனது இராணுவ வல்லமையில் நம்பிக்கை வைத்து, 'தோழா தோழா தோள் கொடு தோழா' என்று பிரிட்டனோடு சேர்ந்து எடுக்கும் ஈராக் மீதான ஒருதலைப்பட்சமான இராணுவத்தாக்குதலாகவே அமையும்.

# வடக்கு - கிழக்கில் சிதைவுறும் வனவளம்! யுத்தம் முடிந்தும் அபாயம் தீரவில்லை!!

ஆசிய அபிவிருத்தி வங்கி அண்மையில் 'பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக' 40 மில்லியன் ரூபாவை அரசாங்கத்துக்கு வழங்கியது. இந்த திட்டத்திற்கூடாக வீட்டு மரவளர்ப்பு, நீர்தாங்கிருப்பு, வயல மரநடுகை, அருவியாயும் இடங்களில் மரநடுகை, பொது இடங்களில் மரநடுகை, தனியார் நிலங்களில் மர நடுகை என பலதரப்பட்ட மரநடுகை திட்டங்களையும், பெரும் விருட்சங்களின் விதைகளை உற்பத்தி செய்தல் மற்றும் இயற்கைக் காடுகளை அளவீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் இந்த நாற்பது மில்லியன் ரூபா பயன்படுத்தப்படவுள்ளது.

இவற்றுடன் இணைந்தவகையில் இலங்கை வன பரிபாலன சபையின் நிகழ்ச்சித் திட்டங்கள், வனப்பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மக்களிடையே சூழலியல் மற்றும் இயற்கைச் சூழலைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்ச்சித் திட்டங்களில் கிராமசேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எல்லோரும் இணைந்து செயற்படுகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இவ்வாறான சூழல் பாதுகாப்பு பெருமெடுப்பில் முன்னிறுத்தப்படுகையில் வடக்கு-கிழக்கிலோ திட்டமிட்ட வகையிலும் யுத்தத்தின் பெயராலும் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதை வேதனையோடு நோக்க வேண்டியுள்ளது.

## திசையன்

வட. - கிழக்குப் பகுதியில் கடந்த இருபது வருட யுத்தச் சூழ்நிலை காரணமாக எந்தவொரு காட்டுருவாக்க நிகழ்ச்சித் திட்டங்களும் பாரியளவில் மேற்கொள்ளப்படவில்லை. அதேவேளை, விமானக் குண்டுத் தாக்குதல், ஷெல் தாக்குதல்கள், நிலக் கண்ணிவெடிகள், பொறிவெடிகள் மூலம் வட.-கிழக்கு பகுதியில் இருந்த வனவளம் பெருமளவில் சிதைக்கப்பட்டுள்ளது.

படையினர் யுத்த காலங்களில் காவலரண்களை அமைப்பதற்கு மரங்களை பயன்படுத்தியது மட்டுமன்றி இன்று சமாதான சூழ்நிலை நிலவும் காலப்பகுதியிலும் காப்பரண்களை அமைப்பதற்கு பயன்தரு மரங்களைத் தறிப்பது தொடர்கதையாகிறது.

குறிப்பாக யாழ்.குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியில் நடைபெற்ற படையினரின் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களால் அழிக்கப்பட்ட தென்னை வளத்தின் எச்சங்கள்கூட இன்று இராணுவத்தினரின் 'சமாதான கால' காவலரண் தேவைகளுக்கும் பாரிய படைத்தளங்களுக்குமாக துடைத்தழிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, யாழ் குடாநாட்டின் வடமராட்சி கிழக்குப் பகுதியை மண்ணரிப்பிலிருந்து காப்பாற்ற முன்பு உருவாக்கப்பட்டிருந்த சவுக்குத் தோப்புக்கள் இராணுவத்தால் யுத்த காலப்பகுதியில் பெருமளவில் எரியூட்டப்பட்டன.

கடந்தகால வன்னிப் பெருநிலப் பரப்பு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னியின் தெற்கு வனப் பகுதிகள் என்று மில்லாதளவு அழிவுக்குட்பட்டுவிட்டன.

அழகிய வனச் சுற்றாடல் - கந்தகப் புகையும் வெடிமருந்துகளும் உறைந்த நச்சுப் பிரதேசமாக மாறிவிட்டது. இந்த இராணுவத் தாக்கம் பெருமளவில் நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்தும் என சுற்றுச் சூழலியலாளர்கள் அஞ்சுகின்றனர். வன்னிப் பெரு




நிலப் பரப்பின் வன விலங்குகளுக்கு யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னமும் விஞ்ஞான பூர்வமாக கணக்கெடுக்கப்படவில்லை.

அப்பகுதிகளில் இராணுவத்தால் விதைக்கப்பட்ட பொறிவெடிகளும், கண்ணி வெடிகளும் மீள் காட்டுருவாக்கத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக எதிர்காலத்தில் அமையவுள்ளதையும் சுற்றுச் சூழலியலாளர்கள் எச்சரித்துக் காட்டுகின்றனர்.

இந்நிலையில் வட.-கிழக்கில் மீள் நிர்மாணம் தொடர்பான செயற்திட்டங்கள் ஆராயப்படுகின்ற இவ்வேளையில் சுற்றுச் சூழல் புனரமைப்பு தொடர்பாகவும் செயற்திட்டங்கள் உருவாக்கப்படுவது மிகவும் அவசியமானதாகும்.

இல்லையேல் எமது பிரதேசத்தின் இயற்கைச் சமனிலையும் ஆரோக்கியமான வாழ்வும் நெடுங்காலத் தாக்கத்திற்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும். ※

# யாழ்.மாவட்டத்தில் தென்னஞ்செய்கையும் மறுசீரமைப்புத் திட்டங்களும்

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் அழிவுற்ற தென்னங் கன்றுகள் தென்னைகள் உள்ள காணியின் விஸ்தீரணம் 1/2 ஏக்கர் அல்லது ஆகக் குறைந்தது 15 தென்னைகள் அல்லது தென்னங்கன்றுகள் அழிவடைந்திருந்தால் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக, பொதுமக்கள் தங்களுடைய கிராம உத்தியோகத்தரிடம் சென்று உடன் பதியுமாறு வேண்டப்படுகின்றனர். பதியும் போது பெயர், விலாசம், காணியின் விஸ்தீரணம், ஒரு வருடத்திற்குட்பட்ட இளம் கன்றுகள், ஐந்து வருடத்திற்குட்பட்ட தென்னைகள், முதிர் தென்னைகள் எத்தனை அழிவுற்றன என்பதனையும், அழிவுற்றதற்கான காரணம் என்ன என்ற விபரங்களையும் பதியவும். இத் தகவல்களை உடன் பெருந்தோட்ட தொழில் அமைச்சு கோரியிருப்பதால், இதுவரை பதியாதவர்கள் பதியுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

### தென்னை மானியத்திட்டம் அமுல்படுத்துதல்

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால் யாழ்.குடாநாட்டில் உடனடியாக இருவிதமான மானியத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**1. தென்னை உர ஊக்குவிப்பு மானியத்திட்டம்**

♣ தென்னந்தோட்டத்தின் விஸ்தீரணம் அரை ஏக்கருக்கு குறையாமலும், 50 ஏக்கருக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

♣ அரசாங்க தோட்டங்களுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது.

♣ 2002.05.10 தொடக்கம் 2002.12.31 வரை அமுல்படுத்தப்படும்.

♣ தோட்ட உரிமை நிரூபிக்கப்படு தல் வேண்டும். (காணி உறுதியின் போட்டோ பிரதி இணைத்தல் வேண்டும்)

♣ தென்னங்கன்றுகள் அல்லது முதிர் தென்னைகளுக்கு பாவிக்கப் படும் ஒரு தொன் (20அந்தர்) தென்னை உரத்திற்கு 2750/- ஊக்குவிப்பு மானியம் வழங்கப்படும்.

♣ தென்னை மரங்களுக்கு பாவிக கப்படும் ஒரு தொன் டொலமைற் உரத்திற்கு 500/- ஊக்குவிப்பு மானியம் வழங்கப்படும்.

♣ எமது அலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் மாத்திரம் விண்ணப்பம் செய்யமுடியும். (உரம் தென்னைமரங்களுக்கு பாவித்த பின்பு) விண்ணப்பத்துடன் உரம் கொள்வனவு செய்த பற்றுச்சீட்டு இணைத்தல் வேண்டும். பின்வரும் ஸ்தாபனங்களில் இருந்து பெறப்படும் பற்றுச்சீட்டுக்கு மட்டும் கொடுப்பனவு வழங்கப்படும்.

1. கமநல சேவை நிலையம் உட்பட்ட அரசாங்க ஸ்தாபனம்
2. கூட்டுறவுச் சங்கம்
3. அரசாங்க உரகாரியாலயத் தில் பதிவு செய்யப்பட்ட உரம் விற்பனை செய்யும் கொம்பனிகள் (உதாரணமாக லிங்கெம், பவர்)

பற்றுச்சீட்டு உரிமையாளரின் பெயரில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

♣ விண்ணப்பத்தின் இரு பிரதிகளுடன் மேற்படி உரப்பற்றுச் சீட்டும், (பெரிய தென்னைகளுக்கு 3 3கி.கி உரம், (A.P.M), இளம் கன்று களுக்கு 1கி.கி. (Y.A.M) உரம், ஒவ்வொரு தென்னைக்கும் என்ற அளவுப்பிரமாணம்) தோட்ட உரிமையை நிரூபிக்கும் ஆவணமும் இணைத்து யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்கலாம்.


ரி.ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்


**2. தென்னந்தோட்டங்களில் ஈரலிப்பு பாதுகாப்பு மானியத்திட்டம்**

♣ உர ஊக்குவிப்பு மானியத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்ற தென்னந் தோட்டங்கள் மட்டும் ஈரலிப்பு பாதுகாப்பு மானியத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

♣ ஒரு ஏக்கருக்கு 30 உரிமட்டைக் குழிகள் 8'x4'x3'என்ற அளவு கிடங்கு (இரு தென்னைகளுக்கு இடையில்) வெட்டப்பட்டு 250 உரி மட்டைகளினால் நிரப்பப்பட்டு மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

♣ ஏக்கருக்கு 2500/- மானியம் வழங்கப்படும்.

♣ 2002.12.31 அன்றுவரை முழு மையாக நிரப்பப்பட்ட உரிமட்டைக் குழிகள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றிற்கு மட்டும் மானியம் வழங் கப்படும்.

♣ எமது அலுவலகத்தினால் வழங் கப்படும் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று மேற்குறிப்பிட்ட மானியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும், மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் நல்லூர் முத்திரைச்சந்தி, பருத்தித் துறை வீதியில் அமைந்திருக்கும் கமநல சேவைக் கட்டிடத்தில் இயங்கும் தென்னைப் பயிர்ச்செய்கை சபையில் ஒவ்வொரு புதன் கிழமையும் அலுவலக நேரத்தில் யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். ※

# உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பாதிக்காத வெளிநாட்டு முதலீடுகள் எமக்குத் தேவை!

கடந்த காலங்களில் நிலவிய யுத்தச் சூழல் தணிந்து சமாதான சகவாழ்வுச் சூழல் ஏற்பட்டிருக்கின்ற இவ்வேளையில் வட-கிழக்கு பகுதி இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் தரை, ஆகாய, மற்றும் கடல் வழியாக இணைப்புக்கள் மீளத் திறக்கப்படும். அத்தோடு இலத்திரனியல் ஊடகங்கள் வழியாக 24 மணிநேரமும் அகலத்திறந்திருக்கும் சாத்தியப்பாடுகளையும் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் - இன்றைய உலகச் சந்தைச்சூழல் (Galobal Market Environment) இப்பகுதிகளில் தனது பண்டங்களை விற்பனை செய்வதற்கான சாத்தியக் கூறுகளை தேடிவருகின்றது.

அதேவேளை - கடந்த இருபது



வருட போரினால் பாரிய அழிவுகளையும், சேதங்களையும் ஏற்படுத்திய வட-கிழக்கின் உட்கட்டுமானத்துறை பாரிய மூலதனத்தை வேண்டிநிற்கின்றது.

இத்தகைய கட்டத்தில் - மக்களின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் பாரிய பணிகள் விசேட செயலணிக்குழுக்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட கால்கோள்கள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இந்நிலையில் வடக்கு- கிழக்கின் பொருளாதார மூலகங்களின் புனரமைப்பு என்பது காத்திரமான கலந்துரையாடலுக்கு இட்டுச்செல்ல வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

இன்று உலகளாவிய போக்கில் தனியார்துறையின் முதலீடு மற்றும் தொழில் முயற்சிகள் என்பன பொருளாதாரத்துறையின் போக்கினை நிர்ணயிக்கும் சக்திகளாகத் திகழும் இவ்வேளையில் - இலங்கை தென்னாசியாவிலேயே தனியார்துறை ஊக்குவிப்புக்களுக்கு காத்திரமான இடத்தை வழங்கும் நாடாகத் தன்னை தகவமைத்துக் கொண்டு 'புதிய கைத்தொழில் நாடாக' (New Industrial Country - NIC) வரும் எதிர்பார்ப்புக்களுடன் 1977முதல் தனது திட்டங்களை வகுத்து வருகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆனால் கடந்த இருபது வருடங்களாக ஏற்பட்ட இனநெருக்கடியின் விளைவாக முனைப்புப் பெற்ற யுத்தச் சூழலானது இலங்கை புதிய கைத்தொழில் நாடாக வரும் கனவை பின்நோக்கி நகர்த்தியே வந்துள்ளது. ஆயினும் இலங்கையின் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகள் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ற விதத்தில் - பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு, சுதந்திர வர்த்தக வலயங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டு வெளிநாட்டு மூலதனத்தை திரட்டுவதற்கானதும் வினைத்திறன் மிக்க தொழில்நுட்பத்தை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன. இவ்வாறான தயார்படுத்தலுக்கு இலங்கையின் வட- கிழக்குப் பகுதிக்கு சந்தர்ப்பம் கிடைக்காமலிருந்தது.

20 ஆண்டுகளுக்குப் பின்னராக சமாதானக் காற்று வீசும் இவ்வேளை - இதுவரை பாரிய பொருளாதார மாற்றங்களைக் கண்டிராத வடக்கு- கிழக்குப் பகுதிக்கு - புதிய முதலீடுகளும், தனியார்துறையினரின் முற்றுகையும் - ஆழமான ஆய்வொன்றுக்கும், கருத்தாடலுக்கும் எம்மை இட்டுச் செல்வனவாக உள்ளன.

இந்நிலையில் இன்றைய சர்வதேச பொருளாதாரப்போக்குகளை நோக்குவோமாயின் இன்றைய சந்தைச் சக்திகளின் தாரக மந்திரமாக அமைவது 'போட்டித்திறன்' (Competitiveness) என்பதாகும். இன்று போட்டித்திறன் என்பது தனியான கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களைக் கொண்டு இங்கு இயங்குவதாக உள்ளது. இப்போட்டித்திறனை வளர்ப்பதற்கான சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுக்கும்போதே எந்தவொரு கம்பனியும் அல்லது வணிகநிறுவனமும் தன்னை போட்டிக்கு தயார்படுத்துவதற்கான திறனையும் காலத்தையும் தேடிக்கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

'உலக போட்டித்திறன்' என்ற பதம் போட்டித்திறனின் உண்மையான பரீட்சிப்பின்படி சர்வதேச சந்தைகளில் இடம்பெற்று வருகின்றது. வணிக நிறுவனங்கள் ஒரு மூடுண்ட அமைப்புக்குள்- அதாவது உள்நாட்டுச் சூழலில் தமது போட்டித்திறனை விருத்தி செய்யமுடியும். அதேவேளை, மறுபுறம் போட்டித்திறனானது வர்த்தகத்தைப்போலவே திறந்த சர்வதேச சூழலொன்றில் செயற்படுத்தப்படுவதன் மூலமே மேம்பாடடையும் என்ற கருத்தும் நிலவிவருகின்றது.

எந்த வணிக கட்டமைப்புக்களும், கைத்தொழில் நிறுவனங்களும் குறித்த அந்நாட்டு பொருளாதாரத்திற்கு பெறுமதியையும் வலுவையும் சேர்ப்பனவாகும். இந்த செயன்முறைக்கு மூலதனம், தொழில்நுட்பம், ஊதியம் மற்றும் இயற்கை வளங்கள் முதலிய உள்ளீடுகள் அவசியமாக இருந்துவருவதுடன் உற்பத்தி, அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளும் இச்செயன்முறைக்கு வலுச்சேர்ப்பனவாகவே அமைந்து வந்துள்ளன.

## அநபாயன்

உண்மையில் செல்வத்தை உருவாக்கும் செயன்முறை நாடுகளின் செழிப்புநிலையைத் தீர்மானிப்பதான ஓர் அம்சமாக இருந்து வருகின்றது. 'நிலையான அடிப்படையில்' பெறுமதி உருவாக்கத்திற்கு சாதகமாக இருந்து வரக்கூடிய சூழலொன்றை தோற்றுவிக்கும் ஒரு நாட்டின் ஆற்றலிலேயே போட்டித்திறன் பெருமளவுக்கு தங்கியுள்ளது. 'நிலையான அடிப்படையில்' என்ற பதம் மிகவும் முக்கியமானதாகும். அது போட்டித்திறனின் நீண்டகால பரிணாமத்தை வலியுறுத்துகின்றது. அதேவேளை கல்வி, விழுமியத் தொகுப்பு அல்லது ஒரு நாட்டின் வருங்கால செழிப்புநிலையின்மீது முக்கியமான செல்வாக்கை கொண்டிருக்கும். தனி நபர்களின் செயலூக்கமான செயற்பாடுகளும் முக்கியத்துவம் அடைகின்றன.

இந்தவகையில் எந்தவொரு நாட்டினதும் போட்டித்திறன் சூழலில் அந்நாட்டின் பொருளாதார அமைப்பு பொதுவாக ஒரே தன்மையைக் கொண்டதாக இருந்து வருவதில்லை. ஒரே தன்மையாக இருந்து விடவும் கூடாது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இணைந்த (Co-habitation) வாழ்வு நடாத்திவிடும் இருவகைகளைச் சேர்ந்த பொருளாதாரங்களை நாடுகள் நிச்சயம் சமாளிக்கவேண்டும். அவையாவன:-

1) அண்மித்த பொருளாதாரம் (The Economy of Proximity)

2) உலகளாவிய தன்மை கொண்ட பொருளாதாரம் (The Economy of Globality) என்பனவாகும்.

அண்மித்த பொருளாதாரம் என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பிரதேசத்திற்கான பொருளாதார மூலக் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளையும், சேவைகளையும் குறித்து நிற்கும். இப்பிரதேசத்தின் பொருளாதார சுயாதிபத்தியத்தை தீர்மானிக்கும் பொருளாதாரமாக இது அமையும்.

மாறாக - உலகளாவிய பொருளாதாரம் என்பது சர்வதேச ரீதியில் செயற்பட்டுவரும் கம்பனிகளின் பொருட்கள், சேவைகள், உற்பத்திகளைக் குறித்துநிற்கும். இப்பொருளாதாரமானது சர்வதேச உறவுகளையும் வெளிநாட்டு தேர்வு முதலீடுகளையும் தீர்மானிக்கும் காரணியாக அமையும்.


இந்த இரண்டு பொருளாதாரங்களின் தேவைகளும் ஒரு தேசத்தின் கட்டுமானத்திற்கு இன்றியமையாததாகும். இன்றைய உலக யதார்த்தத்தில் இரண்டும் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார தேவைப்பாடுகளுக்கும் வள அமைவிற்கும் அவசியமான வையாகும்.

இதற்கேற்ப வட- கிழக்குப் பகுதிகளில் பாரியளவிலான வெளிநாட்டு முதலீடுகளும், புனர்வாழ்வும், புனரமைப்பும் எதிர்பார்க்கப்படும். இன்றைய நிலையில்- எமது உள்நாட்டுப் பொருளாதாரமும் (அண்மித்த பொருளாதாரம்), உள்நாட்டு உற்பத்திகளும் சிதைக்கப்படாத வண்ணம் அவற்றை உள்வாங்க வேண்டியதன் அவசியம் கவனத்திற்குரியதாகின்றது.

எமது பிரதேசங்களின் பொருளியல் சுயாதிபத்தியத்திற்கேற்ற வகையில், உள்ளூர் மூலவளங்களின் நிலைத்திருக்கும் வளப்பிரயோகத்திற்கு ஏற்ற வகையில் நாம் எமது திட்டங்களை தீட்டிக்கொள்வதே சாலச் சிறந்ததாகும். ※

# எல்லைதாண்டும் ஊடுருவல்களால் கொள்ளைபோகும் கடல் வளம்!

இலங்கை வடபகுதிக் கடற்பரப்பில் கடந்த பல வருடங்களாக அத்துமீறி நுழைந்து. எமது கடல்வளங்களைச் சூறையாடிச் சென்றதுடன் இப்பகுதி மீனவர்களை அச்சுறுத்தியும். மீன்பிடி உபகரணங்களைக் கொள்ளையடித்தும், சேதப்படுத்தியும் - ஒருவகையில்




எல்லைதாண்டிய பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டுவந்த இந்திய மீனவர்களுக்கு பேசாலைப் பகுதி மீனவர்கள் தமது கடற்பரப்பில் வைத்து முறையான பாடம் ஒன்றைப் புகட்டியுள்ளனர்.

இத்துணிகர நடவடிக்கையானது இந்திய மீனவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைவதுடன் அரசுக்கும். கடற்படையினருக்கும் 'உங்களில் எங்களுக்கு நம்பிக்கையில்லை' என்ற செய்தி ஒன்றையும் அழுத்தமாகக் கூறி நிற்கின்றது.

### இலங்கை - இந்தியக் கடல்எல்லை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் எல்லையானது குறுகிய பாக்கு நீரிணை. பாக்கு விரிகுடா. மன்னார் விரிகுடா கடல் எல்லை வழியே 1974. 1976 ஆம் ஆண்டுகளில் வரையப்பட்டுவிட்டது. இதன் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு உரியது.

இத்தீவு இன்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஒரு பகுதியாகும். கடல் எல்லை ஒப்பந்தப் பிரகாரம் ஒரு நாட்டின் எல்லைக்குள் மற்றைய நாடு அனுமதியின்றிப் பிரவேசிக்கமுடியாது. எத்தகைய நடவடிக்கைகளிலும் ஈடுபடமுடியாது எனினும் தமிழ்நாட்டு மீனவர்கள் இந்த ஒப்பந்தத்தை மீறியே நடந்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் கோரமான தாக்குதல்களுக்கு உள்ளாகியபோதிலும் இந்திய மீனவர்கள் வடபகுதிக் கடல்வளங்களைச் சூறையாடுவதை நிறுத்தவில்லை. இப்பகுதி மிகச் சிறந்த கடல்வள வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம் ஆகும்.

1983 ஐத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் விளைவாக வடபகுதிக் கடற்பரப்பானது பாதுகாப்புக் காரணங்களுக்காக தடைசெய்யப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மீன்பிடி தடைசெய்யப்பட்டமையினால் வடபகுதி மீனவர்கள் தமது தொழில்வாய்ப்புக்களை இழந்தனர். சில குறிப்பிட்ட கரையோரங்களில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். வடபகுதியைச் சேர்ந்த மன்னார். கிளிநொச்சி. யாழ்ப்பாணம். முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இத்தொழிலை நம்பி வாழ்ந்த 31.540 குடும்பங்களைச் சேர்ந்த 1.43.664 பேர் (1989) தமது தொழில்வாய்ப்பை இழந்து அரைகுறை நிவாரணத்தை நம்பி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த பல மீனவக் குடும்பங்கள் விரட்டியடிக்கப்பட்டதுடன். பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் நாசம் செய்யப்பட்டன. கண்துடைப்புக்காக சிறிய பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும் இரவுநேரத் தடை, தூரத்தடை. பாஸ் நடைமுறை மிகக் கடுமையாக அமுல் படுத்தப்பட்டன.

இதன் விளைவாக பெரும் கடற்பரப்பு வெறுமனே விடப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டு மீனவர்கள் இப்பகுதியினுள் படிப்படியாக ஊடுருவி வடபுலக் கரையோரம் வரையிலும் தமது செயற்பாட்டை விஸ்தரித்தனர். நூற்றுக்கும் அதிகமான இழுவைப் படகுகள் (றோலர்கள்) மூலம் இப்பகுதியிலுள்ள இறால். கடலட்டை. நண்டு. கணவாய் போன்ற பெறுமதி மிக்க வளங்களைச் சூறையாடிச் சென்றனர்.

தமிழ்நாட்டு மீனவர்கள் ஒருபுறம் இழுவைப் படகு மூலம் வளங்களைச் சுரண்டிச் செல்ல மறுபுறம் தென்பகுதி மீனவர்கள் 'பலநாட்கலம்' (Multiday Boat) என்ற படகின் உதவியுடன் திருகோணமலையில் இருந்தும். கற்பிட்டியிலிருந்தும். மன்னார் வளைகுடா. மற்றும் முல்லைத்தீவு பேதுரு மீன்பிடி மேடைகள் வரையிலும் வந்து உயர்ரக மீன்வளங்களைச் சூறையாடிச் சென்றனர்.

இது இன்னமும் தொடர்கின்றது. வடபகுதி மீனவர்கள் மீன்பிடிக்கத் தடைசெய்யப்பட்டு வெறுமனே கரையோரத்தில் குந்தியிருக்க - அந்நிய மீனவர்கள் இப்பகுதியினுள் நுழைந்து எமது வளங்களைச் சூறையாடிச் செல்வதை அரசபடைகள் தடுத்து நிறுத்தவில்லை.

மீனவர்களும். மீனவச்சங்கங்களும் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும்படியும் பலதடைவைகள் கோரிக்கைகளை விடுத்தபோது எதுவித நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை. மாறாக கரையோரங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தி - வடபகுதி மீனவர்களைத் தமது கண்காணிப்பில் வைத்திருப்பதையே குறியாகக் கொண்டிருந்தனர்.

**உயர்பாதுகாப்பு வலயங்களும், கடற்கரையை மூடும் முட்கம்பி வேலிகளும், காவலரண்களும் அப்பாவி மீனவர்களின் வாழ்க்கையைச் சிதைக்கின்றன.**

வடபகுதிக் கடற்பரப்பானது மிகவும் சிறிய கடற்பரப்பாகவே உள்ளது. இச்சிறிய கடற்பரப்பை நம்பியே பல்லாயிரம் மீனவர்கள் வாழ்கின்றனர். மன்னார். கிளிநொச்சி., யாழ்ப்பாணம். முல்லைத்தீவு ஆகிய இடங்களில் 160 இற்கும் மேற்பட்ட மீன்பிடிக் குடியிருப்புகள் உள்ளன. இங்கு 31540 குடும்பங்கள் உள்ளன. 34009 பேர். நேரடியாக இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்த வடபகுதிக் கடற்பரப்பினை விடுத்து நாட்டின் ஏனைய கடற்பரப்பினுள் இப்பகுதி மீனவர்களால் செல்லமுடியாது. அது சாத்தியமானதும் அல்ல. இவ்வாறான சூழ்நிலையில் இந்திய மீனவர்கள் - இப்பகுதியினுள் ஊடுருவுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இக்குறுகிய கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களோ. தென்பகுதி மீனவர்களோ. அல்லது பிறநாட்டு மீனவர்களோ நுழைவது தடுக்கப்படல்வேண்டும். வடபகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் உபத்திரவமும் நிறுத்தப்படல் வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தம். போர்நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற இவ்வேளையில்கூட கடற்படையினர் மீனவர்களை அச்சுறுத்துவதும். பிடித்த மீன்களையும். கடலட்டைகளையும். மீன் பிடி உபகரணங்களையும் பறித்து கடலில் வீசுகின்ற சம்பவங்களும் தொடர்கின்றன. ஆகவே இப்பகுதியின் கடல்வளம் மிகையாக சுரண்டப்படுதை தடுப்பதுடன் இப்பகுதி மீனவர்கள் சுதந்திரமாக தமது கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட ஆவன செய்யப்படுவது அவசியமாகும். வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தமிழர் தரப்பிடம் ஒப்படைக்கப்படும்போது வடக்கு - கிழக்குக்கென தனியான மீன்வள அமைச்சும். அதன் நிர்வாகமும் - ஏற்படுத்தப்படல் வேண்டும். இன்று வடக்கு - கிழக்கு மாகாண சபை என்ற ஒன்று உள்ளபோதிலும் கடல் வளத்துறை மத்திய அரசிடமே உள்ளது என்பது இங்கு நோக்கத்தக்கது.

### வட கரையோர உயர்பாதுகாப்பு வலயங்கள்


பொதுவாக வட கரையோரம் முழுவதும் இன்று முட்கம்பிகளாலும். காவலரண்களாலும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. பல கிராமங்கள் அழிக்கப்பட்டு அவை இராணுவக் கிராமங்களாக ஆக்கப்பட்டுள்ளன. சில பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டு அப்பகுதியில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படாதுள்ளனர். முக்கியமாக வடபகுதியில் கரையோரங்களை சூழ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்துள்ளனர். நாகர்கோவில். பருத்தித்துறை. தொண்டைமானாறு முதல் - பொன்னாலை வரையிலான பகுதி. காரைநகர் பகுதி - தலைமன்னார் துறை முகப்பகுதி என்ற அடிப்படையில் கடல் பிராந்தியத்தை அரைவட்ட ஒழுங்கில் ஆக்கிரமித்துள்ளனர்.

மேலும் இதனை இறுக்கமாக்கும் வகையில் நெடுந்தீவுப் பகுதியிலும் கடற்படைத்தளம் அமைக்கும் முயற்சி நடைபெற்றுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது. இவைதவிர தென்மராட்சியில் கொழும்புத்துறை முதல் சாவகச்சேரி வரையிலும். கிளாலிப் பகுதி வரையும் உயர் பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமித்துள்ளனர். புதிய வீதிகள் கரையோரப் பகுதியில் கிரா மங்களையும். வயல்களையும் ஊடறுத்து அமைத்தும் உள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு பல மாதங்கள் கழிந்துவிட்டன. தாய்லாந்தில் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளும் நடந்து முடிந்துவிட்டன. கரையோர வாழ்மக்கள் தமது சொந்தஇடம் திரும்பும் நிலை இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக புதிய முகாம்களை அமைப்பதிலும். இருக்கின்ற முகாம்களை பலப்படுத்துவதிலுமே இராணுவம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. பாஸ் நடைமுறைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளன. இரவு நேரத் தடைகளும் தொடர்ந்து அமுலில் உள்ளன. படகுகள் படையினரின் கண்காணிப்பில் இருத்தல் வேண்டுமென்ற கட்டாயமும் உள்ளது. கடலில் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும். மீன்பொருட்கள் கடலில் தூக்கி வீசப்பட்ட சம்பவங்களும் தொடர்கின்றன.

### ஆதாம்பால - தரைவழிப் பாதை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிதாக பதவியேற்ற கையுடன் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்ட போது தலைமன்னாரையும் தனுஷ்கோடியையும் இணைக்கின்ற ஆதாம்பால தரைவழிப்பாதை தொடர்பான திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தார். பின்னர் கடந்த மாதத்திலும் இந்திய விஜயத்தின் போது இத்திட்டம் தொடர்பான கருத்தையும் அழுத்தமாக கூறியிருந்தார். இத்தரைவழிப்பாதைக்கு 500 மில்.டொலர் செலவாகும் எனவும். 21கிலோமீற்றர் நீளமான இப்பாதை - நான்கு வழிகளையும். ரயில்ப் பாதையையும் கொண்டிருக்குமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தொலைபேசி இணைப்புக்களும் நிலக்குழாய் இணைப்புக்களும் ஏற்படுத்தப்படுமெனவும்




இலங்கை வடபகுதிக் கடலில் அந்நிய மீனவரின் ஊடுருவல்

பொறியியலாளர்கள் கூறியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கான பர்வாங்க ஆய்வை இலங்கை. இந்திய பொறியியலாளர்கள் மேற்கொண்டுள்ளனர். இத்திட்டமானது இன்றைய மாறிவரும் உலக ஒழுங்கில் கவர்ச்சியானதும். அவசியமுமானதே. எனினும் இத்திட்டம் ஸ்திரமற்ற அரசியல் சூழலில் இப்போது தேவைதானா? அவசரஅவசரமாக இத்திட்டம் தயாரிக்கப்படுவதற்கான பின்னணி என்ன என்பது ஆராயப்பட வேண்டியதாகும். உள்ளூரில் பாதைகள் மூடப்படுவதும். மூடப்பட்ட பாதைகள் திறபடாமலும் இருக்கின்ற இவ்வேளையில் இப்பிரதேசத்துடன் தொடர்புடைய இந்தப் பாரிய போக்குவரத்துத் திட்டம் விநோதமான ஒரு திட்டமாகவே அமைந்துள்ளது. அவசர அவசரமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் பாதுகாப்புக் கெடுபிடிகள் இரட்டிப்பாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இதுவும் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு தலைமன்னாரில் இருந்து வெளியேறிய மக்கள் பலாலிப்பகுதியைப் போன்ற ஒரு நிலைக்கு தள்ளப்படலாம். மேலும் சமுத்திரச் சூழல் பிரச்சினைகள். கடற்றொழில் துறைசார்ந்து ஏற்படப்போகும் பாதிப்புக்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்றே தெரிகிறது. ஆகவே இத்திட்டம் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டு ஸ்திரமான ஒரு அரசியல் சூழ்நிலை இப்பிரதேசத்தில் ஏற்படும் வரை ஒத்திவைக்கப்படல் வேண்டும் என்பதே மக்கள் அவாவாக உள்ளது.

**கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன்**
விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*காலதாமதமான நீதி, மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்.*

-கிளான்ஸ்ரோன்

# நமது நோக்கு

## இனியும் தொடரக்கூடாது !

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 139 தமிழ் அரசியற் கைதிகள் நேற்றுமுன்தினம் முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல ஆண்டுகளாக வழக்கு விசாரணைகளின்றி சொல்லொணாத் துயரங்களுடன் சிறைகளில் வாடும் இத்தமிழ் அரசியற் கைதிகள் தம்மை விடுவிக்குமாறு கோரிப் போராட்டம் நடாத்துவது ஒன்றும் புதிதல்ல.

ஏற்கனவே, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டங்களையும் வேறு பல வடிவங்களிலான போராட்டங்களையும், நடாத்திய இந்தக் கைதிகள் - அரசாங்கத்தினதும், அரசியல்வாதிகளினதும் மனிதநேய ஆர்வலர்களதும் வாக்குறுதிகளை நம்பி தமது போராட்டங்களை இடைநடுவில் கைவிட்டிருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையும் கானல் நீராகவே தொடர்ந்து கொண்டிருந்தது.

இந்தநிலையில் - இனிமேலும் வெற்று வாக்குறுதிகளை நம்பிக் கொண்டிராமல், இறுதியான முடிவொன்றை நோக்கியதாக தமது போராட்டம் இருக்குமென்ற அறிவிப்புடன் தமிழ் அரசியற் கைதிகள் நேற்று முதல் போராடத் தலைப்பட்டுள்ளனர்.

யுத்தத்தில் அரசாங்கப் படைகளுக்கு எதிராக களத்தில் நின்று போரிட்ட போர்க் கைதிகளையே விடுவிக்க முடியுமென்றால், சந்தேக நபர்களாகவும் , வழக்கு விசாரணைகளின்றியும் வாடும் தமக்கு ஏன் இந்தச் சிறைவாழ்வு? என்ற ஏக்கம் மேலிட தமிழ் அரசியற் கைதிகள் எழுப்பும் அவலக்குரல் கல்லையும் கரைய வைப்பதாகும்.

கடந்த முறைகளைப் போலல்லாமல்- இந்த முறை தமது விடுதலையில் ஒரு தீர்மானமான முடிவினை நோக்கியதாக தமது போராட்டம் இருக்குமென அவர்கள் தெரிவித்துள்ளநிலையில் - இக்கைதிகளின் விடுதலையிலுள்ள சட்டச் சிக்கல்களையும் நோக்க வேண்டியுள்ளது.

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் இவர்கள் கைதானபோதும் அவசரகாலச் சட்டம் காலாவதியான இன்றைய சூழலில், அவசரகாலச் சட்டத் தின் கீழுள்ள பிரமாணங்கள் யாவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குரிய சட்டமுறி ஒன்றின் மூலமாக உள்வாங்கப்பட்டுள்ள நிலையில்- இன்னமும் அவசர காலச் சட்டத்தின் மறைமுகமான பிடிக்குள் இக் கைதிகள் இருப்பதாகவே கருதமுடியும்.

இவ்வாறான சூழலில்- இத்தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை இரு கட்டங்களினூடாக நகர்த்த முடியும்.

ஒன்று- மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி மூலமான பொது மன்னிப்பொன்றை வழங்கி தமிழ் அரசியற் கைதிகளை உடனடியாக விடுவிக்கலாம்.

மற்றையவழி - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சாதாரண பாராளுமன்றப் பெரும்பான்மையினால் நிரந்தரமாக நீக்குவதன் மூலம் - இது போன்ற தடுத்து வைப்பு கொடூரங்களும் அடாவடித்தனங்களும் இனிமேலும் நிகழாமலிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் - தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்க வழி செய்தல்.

இவற்றில் முதலாவது வழியைப் பிரயோகிப்பதே தற்போதைக்கு ஏற்றது என தமிழ் அரசியற் கட்சியினர் கூறினாலும் அத்தகைய தளர்வு- தமிழர்களுக்கு நீடித்த பாதுகாப்பைத் தராதென்பது திண்ணமே.

ஏனெனில்- பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கத்தரப்பு என்ன தான் சாக்குப் போக்குகளைச் சொன்னாலும் - குறிப்பாக அரசியற் தீர்வொன்றை எட்ட முனைகையில் தெற்கில் ஏற்படலாம் எனக்கருதப்படும் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையென்ற அரச தரப்புவாதம் உட்பட - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வரலாற்று அடிப்படையில் நோக்கினால் அதன் தாக்கம் தமிழர்களையே பெரும்பாலும் குறிவைத்திருந்தது என்பது புலனாகும்.

எனவே-தமிழ் அரசியற் கைதிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்த போராட்டத்தை உடனடியாகக் கருத்திலெடுத்து, அவர்களது விடுதலைக்கு, நிரந்தரமான பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கல் மூலமாக தீர்வினைக் காண்பதற்கு அனைத்து தரப்பினரும் அழுத்தங்களைத் தரவேண்டியது அவசியமாகும்.

இனியும் இத்தகைய நிலை தொடரக்கூடாது என்பதில் அனைவரும் உறுதியாகவும் விழிப்பாகவும் இருப்போமாக.

# அக்கராயன் முதல் அநுராயன்புரம் வரை


## அறிவியல் வளர்ச்சி ஒரு பார்வை

இலங்கையின் முதல் மனிதர்கள் - விஜயன் வழிவந்த ஆரியர்கள் - என்ற சிங்களப் பேரினவாத வரலாற்று கதைகளெல்லாம் பொய்யாகிக்கொண்டிருக்கின்றன. இந்தியாவின் கங்கைச்சமவெளி எழுச்சியின் பின் அங்கு எழுந்த அரச பரம்பரையின் விதையான விஜயன் கி.மு. 483ல் இலங்கைக்கு வந்தபோதே இங்கு முதல் மனித வருகை பதிவானதாக மகாவம்சம் கூறுகின்றது. கங்கைச்சமவெளி எழுச்சி கி-மு. 1000க்கும் முன்னதானது.

விஜயன் வருகையின் முன் இலங்கைத்தீவில் காட்டுமிராண்டிகளே இருந்தார்கள், என்பது சிறிலங்கா கூறும் வரலாறு. பாடநூல்களிலும் இதுவே கூறப்படுகின்றது. விஜயன் மற்றும் தோழர்களின் முயற்சியால் அநுராதபுரம் உருவாக்கப்பட்டது என்றும் பண்டுகாபயன் கி - மு. 200ல் அதனை தலைநகராக்கினான் என்றும் விஜயனே குளக்கட்டுமான பொறியியலையும், விவசாயத்தையும், இரும்பையும், மந்தைமேய்ப்பையும் கொண்டு வந்தான் எனவும் சிங்கள வரலாறு கூறுகின்றது.

இருந்தும் - இந்த புனைவுகளுக்கு மத்தியில் வரலாற்றை நிறுவும் அறிவியல் கருவியான தொல்லியல் வளர்ச்சியுற்றதால் இது பொய்யான கருத்தாக நிறுவப்பட்டு வருகின்றது.

**previjaya** என்ற வரலாற்றுப்பகுதியே இலங்கையின் வரலாற்றில் தோற்றம் பெற்றுவிட்டது. இது விஜயனுக்கு பின்னர் தோற்றம் கொண்டதாகக் கூறப்படும் அறிவியல் வளர்ச்சியை - விஜயன் வருகை என்ற காலத்துக்கு முன்பதாக தொல்லியல் பின்னகர்த்தியுள்ளது. அந்த அறிவியல் வளர்ச்சியின் சுவடுகள் அதிகமாக தமிழர் தாயகப்பகுதியில் உள்ளமை முக்கிய விடயமாகும். விஜயன் வருகையை முற் கால மனித குலவாழ்வு வளர்ச்சியை சான்றாதாரங்களுடன் நிறுவிய தொல்லியலாளரான கலாநிதி. சிரான் தெரனியகல 5 லட்சம் ஆண்டுகளின் முன் இலங்கையில் மனிதவாழ்வு ஆரம்பமானதாக நிறுவியுள்ளார்.



அக்கராயன் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கற்குவை ஈமச்சின்னங்கள்

இரு கற்காலங்களிலும் தொடர்ச்சியான வாழ்வுக்கும் அக்கராயன் ஆறு முக்கிய இடத்தைப்பெறுகின்றது. மன்னாரில் இடைக்கற்கால மனிதவாழ்வு மாந்தையில் செறிவாகின்றது. இங்கு குறுணிக்கல்லாயுதங்களும், டூகோங் என்ற கடலுயிரின் எலும்புகள் கல்லாயுதங்களுக்கு பயன்படுத்தப்பட்ட சான்றுகளும் எடுக்கப்பட்டன. இடைக்கற்கால மனிதன் காடுகளுடன் இணைந்து கடலுக்கு அண்மையாக வாழ்ந்திருக்கிறான். இது அவனின் அறிவியல் வளர்ச்சி முதிர்ச்சியின் வெளிப்பாடாகும். இந்த இடைக்கற் காலத்தில் தான் இங்கு குவாட்ஸ் கற்களை உரசி தீயை உண்டாக்கும் நுட்பம் அறியப்பட்டது.

வரண்ட பகுதியான ஈழத்தின் வடபகுதி - கற்கால மனித வாழ்வுக்கு வசதியானதாக அமைந்தது. தீயை கண்டறியமுன்னர் - உடைகளை அறியமுன்னர், மனிதன் குளிரிலிருந்து தன்னை காப்பாற்ற அறியான். அந்தநிலையில் அவன் தன் வாழ்வை வரண்ட நிலத்தில் ஆறுகளின் கரைகளில், நீர் தேங்கிய இடங்களில் அமைத்து கொண்டான். இதனால் ஈழத்தின் வடபகுதி முழு மனித வாழ்வுக்கு சாத்தியமா கியது.

இடைக்கற்காலத்தில் வேட்டையாடலுடன் காட்டுத்தானியங்களை சேகரிக்கும் பழக்கம் உணவுக்காக ஏற்பட்டது. காட்டுவிலங்கு களை தன் தேவைக்காக வளர்க்கும் பழக்கம் ஆரம்பமானது. சேகரித்த தானியங்கள் தவறி வீழ்ந்து தரையில் வீழ அது முளைப்பதுகண்டு பயிர் செய்யும் அறிவியல் மனிதனிடம் ஆரம்பமானது. கற்கால மனித வாழ்வில் - புதிய கற்காலத்தில் தான் விவசாயம், மந்தை மேய்ப்பு, மட்பாண்ட உற்பத்தி என்பன தோன்றின. ஆனால் எமது மண்ணில் புதிய கற்கால சான்றுகள் ஏதுமில்லை. 28ஆயிரம் ஆண்டுகளில் இருந்து கி.மு 2000ஆண்டு வரை இடைக் கற்காலமே எமது மண்ணில் நிலவி வந்தது. எம்மிடம் மூதாதைகளின் புதிய கற்கால வாழ்வுக்கான சான்றுகள் இல்லாத காரணத்தால் இடைக்கற்கால முடிவுக்காலகட்டத்தில் தான் விவசாயம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என கருதப்படுகின்றது.

விவசாயம் எனப்படும் போது-மனித மூதாதைகள் வண்டல் மண் படிவுகளில் தான் விவசாயத்தை ஆரம்பித்தனர். வேகம் குறைந்து ஓடும் ஆறுகள். படுகை ஆழம் குறைந்த, அகலம் குறைந்த ஆறுகள் என்பன மழை காலத்தில் -வெளியான பகுதிகளில் அகலிக்கும் போது வண்டல் படிவுகள் ஏற்படுகின்றன. பயிர்ச் செய்கைக்கு வளமான மண் அது- வன்னியில் பேராற்றின் களிக்காடு பகுதிகள், கனகராயன் ஆற்றின் அம்பகாமம், புலுமச்சிநாத குளம் உட்பட இரணைமடுவின் அலைகரைக்கு தெற்காக உள்ள பகுதிகள், அக்கராயன் குளம், அதன் கீழான பகுதிகள் என்பன முக்கிய வண்டல் வெளிகளாகும் . இந்த வண்டல் வெளிகளில் நீர் தேங்கிய பகுதிகளில் இடைக்கற்கால மனிதர்கள் தானியங்களை பயிரிட்டிருக்க வேண்டும் என கருதப்படுகிறது. வன்னியில் தொல்லியலில் விவசாயப்படுகை அகழாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அநுராதபுரத்தில் மேற் கொள்ளப்பட்டது. அங்கு கி.மு. 1000 ஆண்டுகளின் முன் அருவி ஆற்றின் ஓரமாக விவசாயம் செய்ததற்கான சான்றுகள் எடுக்கப்பட்டன.

அறிவியல் பண்புகளில் ஆரம்பக்கட்டத்திலே இருந்த மூதாதை மனிதர்கள் 1லட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகளின் முன் பயன்படுத்திய கல்லாயுதங்கள் வன்னியிலும், மன்னாரிலும், புத்தளத்திலும், அம்பாந்தோட்டையிலும் மட்டுமே சிரான் தெரனியகல குழுவினரால் 1980களில் மேற்கொண்ட ஆய்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்டன. இவை பழைய கற்கால ஆயுதங்களாகும். இதன்அடிப்படையில் இந்த இடங்களில்தான் முதல் மனித வாழ்வு இருந்திருக்கிறது. இவற்றில் அம்பாந்தோட்டை மட்டுமே தற்போதைய சிங்கள இடம் ஆகும்.

வன்னியில் - இன்று இரணைமடு குளமுள்ள பகுதியில் குளஅணையின் இருபக்கமேடுகளிலும் அக்கராயன் குளத்தில் நீர் நிரப்பும் - அக்கராயன் ஆறு, நிலை ஆறு, கலவலப்பு ஆறு, திருமுறிகண்டியருகாக ஓடும் ஆறு, கனகராயன் ஆற்றில் இணையும் பணிச்சன்குளம், மாங்குளம், கிழவன் குளம் ஊடாக பாயும் ஆறுகளின் ஓரங்களிலிருந்த மேடுகளிலும், கொக்காவில், 18ஆம் போர் மேடுகளிலும் பழைய கொக்காவிலின் புழுதி ஆறு தொடக்கப்பகுதி மேடு ஒன்றிலும் - மன்னாரில் முருங்கன், மறிச்சிக்கட்டி பகுதிகளிலும், புத்தளத்தின் பகுதிகளிலும் - மனித மூதாதைகளின் பழைய கற்கால ஆயுதங்கள் எடுக்கப்பட்டன. இவை கிரவல் (சரளைக்கல் - என கிரவல் கல்லுக்கு சென்னைப்பல்கலைக்கழக - ஆங்கிலம் தமிழ் சொற்களஞ்சியம் தமிழ்ச்சொல்லை தருகின்றது.) கற்களில் செய்யப்பட்டவை ஆகும்.



அக்கராயன் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கற்குவை ஈமைச்சின்னங்கள்

இந்த பழங்கற்கால மனித மூதாதைகள் செறிவாக வாழ்ந்த பகுதிகளாக அக்கராயன் ஆற்றின் அலைகரையும் கொக்காவிலும் காணப்படுகின்றன. இந்த பழைய கற்காலத்தின் வெளிகளையே மனிதர்கள் வாழிடமாகக் கொண்டிருந்தனர். அறிவு விருத்தியடைகின்றபோதே அவர்கள் கடற்கரைகளை,

**தி. தவபாலன்**

மலைக்குகைகளை, குளிரிடங்களை நாடினர். எம் தாயகப்பகுதியில் பழைய கற்காலம் கி- மு. 28ஆயிரம் ஆண்டுகள் வரை நீள்கின்றது. அதன்போது ஆறுகளின் படுகைகளில் இருந்த சிறிய குவாட்ஸ் கற்களை அம்பு முனைகளாகவும், அறுக்கும் கத்தி அலகுகளாகவும் ஆக்கும் நுட்பம் எம் மூதாதைகளிலும் தோற்றம்பெற்றது. இது இடைக்கற்காலம் அல்லது குறுணிக்கற்காலம் அல்லது நுண்கற்காலம் **(micnolithic)** எனப்படுகின்றது. இந்தக் காலத்தில்தான் மனிதவாழ்வு அநுராதப்புரப்பகுதிக்கும் - இரத்தினபுரியின் மலைக்குகைகளுக்கும் நகர்ந்தது. வன்னியிலே - வற்றிய ஏரிக்கடலையுடைய - இலகுவில் மீனைவேட்டையாடக்கூடிய பகுதியான பூநகரிக்கு இடைக்கற்கால மனித வாழ்வு நகர்கின்றது. பூநகரியின் கரையோர மணல் மேடுகளிலும் மண்டைக்கல் ஆறின் கழிமுகப்பகுதிகளிலும், அக்கராயன் பகுதிகளிலும் இடைக்கற்கால குறுக்கல் ஆயுதங்கள் எடுக்கப்பட்டன. இந்த

வன்னிக்கு வருவோம். கி.மு.2000 உடன் இடைக்கற்காலம் முடிவுக்கு வர செம்புக்காலம் ஆரம்பமாகின்றது. செம்புக்காலத்தில் செம்பு பயன்பாடு இருந்ததற்கான இலங்கையின் மிகத் தொன்மையான சான்றுகள் திருகோணமலையின் சேருவிலையிலும், மன்னாரின் மாந்தையிலும் மட்டுமே எடுக்கப்பட்டன. மாந்தையில் 1950களில் மனித எலும்புக்கூடு ஒன்று தொல்லியலாளர்களால் எடுக்கப்பட்டது. இதனுடன் செம்புச் சான்றுகள் எடுக்கப்பட்டன. மனித எலும்புக்கூட்டிற்கு மாந்தை மனிதன் என தொல்லியலாளர் பெயர் சூட்டினர். அந்த மாந்தை மனிதனதும் செம்புச் சான்றினதும் தொன்மை கி.மு.1800 ஆண்டுகளாகும். இலங்கையில் முதல் உலோககால மனிதன் மாந்தை மனிதன் என கலாநிதி எஸ்.தெரனியகல கூறுகிறார்.

மாந்தை மனிதனின் காலம் சிந்துவெளி நாகரிகம் ஆரிய வருகையின் முன் எழுச்சி பெற்றிருந்த காலம் என்பதையும் தெரனியகல குறிப்பிடுகிறார். செம்புக் காலத்தைத் தொடர்ந்து இரும்புக்காலம் வருகின்றது. இரும்புக்காலம் கி.மு.1000த்தில் ஆரம்பமாகிறது. இரும்புக் காலத்தில் தமிழர்கள் பெருங்கற்களை பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைக்கும் பழக்கம் எழுச்சி பெற்றது. இதனால் தமிழருக்கு இரும்புக்காலம் பெருங்கற்காலம் எனவும் வரையறுக்கப் படுகின்றது. தமிழர் தாயகப்பகுதிகள், இன்றைய சிங்களப் பகுதிகளிலும் கி.மு.1000 ஆண்டுகள் தொன்மையான பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் உள்ளன.

(நாளை தொடரும்)

# உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் செமஸ்ரர் முறை நீக்கப்படும்!

## பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(மருதனார்மடம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் செமஸ்ரர் முறை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பயிற்சி அலகு பாடப்போதனைத் திட்டம் அடுத்த ஜனவரி மாதத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தொழில்நுட்ப நிறுவனங்களின் பதில் பணிப்பாளர் நாயகம் Dr.அபயசேகரா தெரிவித்தார்.

யாழ் உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு உரையாற்றும்போது அவர் அவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் - யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2003ஆம் ஆண்டில் இருந்து கிராமிய அபிவிருத்தி டிப்ளோமா, தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா, தொழில்சார் ஆங்கில டிப்ளோமா ஆகிய மூன்று கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் கீழ்உள்ள கல்வி நிறுவனங்களுக்கிடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவர உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின்போது இவருடன் நிர்வாகப் பொறுப்பாளர் ஹேமச்சந்திரா மற்றும் குருநாகல், தெகிவளை தொழில்நுட்ப நிறுவனங்களின் இயக்குனர்களும் வந்திருந்தனர். (89)

# அவசர கால நடவடிக்கை குழுக்கள் அமைக்கப்படும்

## ஜனாதிபதி செயலகம் மும்முர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் அவசரகால நடவடிக்கைக் குழுக்களை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகம் விடுத்த பணிப்புரையைத் தொடர்ந்து இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி குழுக்களை அமைப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி கோரி ஜனாதிபதியின் செயலாளர் நாட்டின் அனைத்து மாவட்டச்செயலகங்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இவ்வாறான குழுக்களை ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும், பிரதேச செயலாளர் பிரிவுமட்டத்திலும் அமைப்பதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை அனைத்து மாவட்ட செயலகங்களும் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றன.

# அராலிப்பகுதிக்கு மிகவிரைவில் மின்விநியோகம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக மின்சாரவசதி கிடைக்காமல் உள்ள அராலிப் பகுதிக்கு மிகவிரைவில் மின்சாரம் கிடைக்கவுள்ளது.

அராலி தெற்கு, அராலி கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு இதுவரை காலமும் மின்சாரவசதி கிடைக்கவில்லை. தற்போது இப்பகுதிகளில் உள்ள மின்சார மார்க்கங்களைப் புனரமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அநேகமாக இம்மாத இறுதிக்குள் மேற்படி வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துவிடும் என்றும் இப்பகுதிக்கு மின் விநியோகம் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# சாகித்திய விருது வழங்கப்படும் விழா கொழும்பில் நடைபெற்றது

(கொழும்பு)

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் 2002 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சாகித்திய விருது வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலை இலக்கியப் பேரவை என்பன தமிழ், சிங்கள, ஆங்கில இலக்கியப் பேரவைகளுடன் இணைந்து இவ்விருது வழங்கும் வைபவத்தினை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த வைபவத்திலே மூத்த எழுத்தாளர்களான எஸ்.வரதராஜன் (வரதர்), பேராசிரியர் எம்.பி. ஆரியபால ஆகியோருக்கு சாகித்திய ரத்ன விருது வழங்கப்பட்டதுடன் சிறந்த நாவலுக்கான விருது லெ. முருகபூபதிக்கும், சிறந்த நாடகத்துக்கான விருது கந்தையா சிறிகணேஷனுக்கும் ,கவிதைக்கான விருது ரி.எஸ்.ஜெளபர்கானுக்கும் இலக்கியத்துக்கான விருது எஸ். அருளானந்தத்திற்கும் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் சென்ற வருடம் வெளியான ஏழு சிறந்த தமிழ் நூல்களுக்கும், பதினெட்டு சிங்கள நூல்களுக்கும், ஐந்து ஆங்கில நூல்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

# அநாதரவான பெண்சிசுவை தத்தெடுக்க விண்ணப்பிக்கலாம்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரியின் பாதுகாப்பில் உள்ள மூன்று மாத பெண் குழந்தையை தத்தெடுக்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தும்பளை லூர்துமாதா தேவாலயத்திற்கு அருகில் அநாதரவாகக் கிடந்த பெண் குழந்தை பருத்தித்துறை பொலிசாரால் மீட்டெடுத்து மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நீதிபதி அக் குழந்தையை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.இக் குழந்தையை தத்தெடுக்க விரும்புபவர்கள் பருத்தித்துறை வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீர் இறைக்கும் இயந்திரம் பாடசாலையில் திருட்டு

(வடமராட்சி)


நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டிருப்பதனால் வதிரி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் குடிநீரினைப் பெறுவதில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

நள்ளிரவு வேளை அறைக்கதவினை உடைத்து திருடர்கள் நீர் இறைக்கும் இயந்திரத்தினை களவாடிச்சென்றுள்ளனர் என்று பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (23)

# கைதிகள் விடுவிப்பு - இன்னும் சில பதிவுகள்



சந்தகிரியின் உதடுகளுக்குள் சங்கமித்துக் கிடக்கிறது புன்னகை! புரிந்துணர்வு உடன்பாட்டில் இனி அவருக்கு குழப்பம் இருக்காது போலும்!



ஸ்ரீலங்கா அரச பொலிசாருடன் தமிழீழக் காவல்துறை ஒழுங்கு நடவடிக்கையில்



மௌனமான விடுதலை மகிழ்ச்சியில் கப்டன்! அவரது மனைவியின் பரபரப்பான சிரிப்பு கமராவுக்குள் சிறை வைப்பு!



மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொடவின் கடைக்கண் பார்வையின் அர்த்தம் என்ன...? வியப்பா...?

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கி நேரடியாக நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

வடகிழக்குப் பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு நேரடியாக நிதி உதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

மேற்படி பகுதிகளில் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இந்த நேரடி நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்றிட்டங்களுக்கு முதற்கட்டமாக தேவையான நிதியினை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராக உள்ளது.

ஏற்கனவே தயார்நிலையில் உள்ள செயற்றிட்டங்கள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன.

நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து செயற்றிட்டங்களையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் நேரடியாக கண்காணிப்பார்கள் என்றும் கட்டம் கட்டமாகத் தேவையான நிதியும் விடுவிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது.

# அவசர விபத்து சிகிச்சைக்கு நவீன விபத்து சேவைப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் விபத்து அவசரகால சேவைப் பிரிவு ஒன்று நவீன வடிவமைப்பில் உருவாக்கப்படவுள்ளது. குடாநாட்டில் விபத்துக்களில் சிக்கிக் காயம் அடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து மேற்படி விசேட மருத்துவ சேவைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

மிகவும் நவீன மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டதாகவும் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாகவும் தனித்து இயங்கக் கூடிய வகையில் மேற்படி மருத்துவ சேவைப்பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

இம்மருத்துவ சேவைப்பிரிவுக்குத் தேவையான நவீன மருத்துவ உபகரணங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவுள்ளது.

இப்பிரிவில் தனியான விசேட சத்திரசிகிச்சைக்கூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு அண்மையிலேயே இப்பிரிவு உருவாக்கப்படவுள்ளது. இப்பிரிவுக்கெனத் தனியான மருத்துவரும் ஏனைய ஆளணியினரும் நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய தேவைகருதி மேற்படி அவசரகால மருத்துவ சேவைப்பிரிவு 24 மணிநேரமும் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரிவில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் ஏனைய நோயாளர்களுக்கும் விசேட சிகிச்சை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க)

## இன்றைய நாள் இனிய நாள்

**03.10.2002 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- எதிரி தலை குனிவு, புதியமுயற்சி, வைத்தியச் செலவு,தேகசுகக்குறைவு, புத்திரர் சுகயீனம். |
| இடபம் | :- மாதா சுகயீனம், துணிவின்மை, நம்பிக்கை குறைவு, வாகனச்செலவு. |
| மிதுனம் | :- பணவரவு, தெய்வ வழிபாடு, வயிற்றில் சுகயீனம், உறவினர் தொடர்பு. |
| கர்க்கடகம் | :- பணவரவு குறைவு, காரியத்தடை, தகாத உறவு, பயம். |
| சிங்கம் | :- பணவரவு குறைவு, உறவினர் வெறுப்பு, தெய்வவழிபாடு. |
| கன்னி | :- வீண்செலவு, காரியத்தடை, சுகயீனம், வாக்குவாதம், மனஸ்தாபம். |
| துலாம் | :- தெய்வதரிசனபலன், சான்றோர்தரிசனம், செய்தொழில் மந்தநிலை, பெண்களால் சிறிது நன்மை. |
| விருச்சிகம் | :- தொழில் முன்னேற்றம், மதிப்பு, மரியாதை, வெளியூர் பயணம் |
| தனு | :- பிதாவுடன் மனஸ்தாபம், சுகயீனம், அதிக செலவு, எதிரியின் தொல்லை. கௌரவக் குறைவு. |
| மகரம் | :- எடுத்த முயற்சி தோல்வி, பிரயாணத்தடை, மனச்சோர்வு, எடுத்த வழக்குத் தாமதம். |
| கும்பம் | :- சுபகாரியங்களில் பங்கு, மனமகிழ்ச்சி, மரியாதை, கௌரவம், மனைவி மகிழ்ச்சி. |
| மீனம் | :- தனவரவு, காரியசித்தி, நோய் குணமடைதல், எதிரி தலை குனிவு. |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.


# உங்கள் பிரச்சினைகளுக்கு இதோ...!

## உடனடித் தீர்வு

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவையான ஆலோசனைகள், விளக்கங்கள், தகவல்கள் என்பவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து நேரடியாகப் பெற்றுத்தர அறிமுகமாகிறது,

"குறைதீர் மன்றம்"

உங்களது பிரச்சினைகளைக் குறிப்பிட்டு - உங்கள் பெயர், முகவரி, தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் உடனே எமக்கு அனுப்பிவையுங்கள். ஓரிரு தினங்களுள் உங்கள் பிரச்சினை சம்பந்தப்பட்ட அதிகாரியின் பதிலுடன் குறைதீர்மன்றத்தில் பிரசுரமாகும்.

உங்கள் மனுக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'குறைதீர் மன்றம்'
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# எங்கே போகிறோம்...?

-நேசன்-

எமது வாழ்வின் சகல கட்டங்களிலும் எமது கூர்ந்த கவனிப்பையும் ஆழ்ந்த அக்கறையையும் வேண்டிநிற்கின்ற சந்தர்ப்பங்கள் ~ விஷயங்கள் ~ அம்சங்கள் ஏதேனும் இருந்தே தீரும். அத்தகைய கவனிப்பும் அக்கறையும் வழங்கப்படத் தவறும்பட்சத்தில் ~ காலங்கடந்த விசனங்களும் இழப்புக்கள் பற்றிய துயரங்களுமே மிஞ்சிவிடுகின்றன.

இன்று நம் வாழ்வு ஒரு திருப்புமுனையில் மகத்தான ஒரு மாறுதலை ~ ஆறுதலை எதிர்நோக்கி நிற்கிறது. இந்த நிலையில் நிகழுகின்ற பல விஷயங்கள் சந்தோஷமானவையாக நிறைவு தருபவையாக இருப்பது மிகத்திருப்தியான விஷயம்தான். ஆனாலும் நிகழும் எல்லாமே அத்தகையவைதானா? பின்விளைவுகளை பெரிதாய் எண்ணிப்பாராமல் நாம் பல விஷயங்களை ஒரு குழந்தைத்தனமான களிப்போடு ஏற்றுக்கொண்டு விட்டோமோ....? அனுமதித்து விட்டோமோ.....?

சிந்திக்க வேண்டும்... நிறையவே சிந்திக்கவேண்டும். பல விஷயங்களில் நாம் விழித்துக்கொள்ள வேண்டும் ~ எச்சரிக்கையாக இருக்கவேண்டும்~ இதை மறந்து நாம் எங்கேதான் போய்க்கொண்டிருக்கிறோம்? கொஞ்சம் சிந்திப்போமா என் அன்பானவர்களே!

'தொலைக்காட்சி' இன்று நமது பிரதேசத்தில் பலருக்கும் ஆறுதலும் மகிழ்ச்சியும் தருகின்ற ஒன்றாக இருக்கின்றது ~ ஆம் சரிதான் ~ அது தொலைக்காட்சிதான் நம் வீடுகளுக்குள் புகுந்து அதன் உள்ளமைதியை கட்டுக்கோப்பான ஒரு தன்மையை சிதைக்க முனைவதுபோல படவில்லையா உங்களுக்கு சிக்கல் இல்லாமல் நமக்கு மிகவும் கிட்ட வந்துவிட்ட தூரதர்ஷனும் ~ பொதிகையும் ~ சக்தியும் மற்றும் இன்னோரன்ன பலவும் பார்வையாளராகிய எமக்கு வெறும் பொழுதுபோக்கு(?) இன்பத்தை மட்டும்தான் தருகின்றனவா? வீட்டுப்பணிகளில் முனைந்து பாடுபட்டு ஓய்ந்திருக்கின்றவர்கள் விடயத்தில் வேண்டுமானால் இவை பரவாயில்லாதவையாக அமைந்து விடலாம். ஆனால் கல்வியில் வாழ்வின் முன்னேற்றப்படிகளில் அக்றையோடு அடிபதித்து நகர வேண்டிய நமது குழந்தைகள் ~ சிறுவர்கள் ~ மாணவர்கள் இத்தகைய பொழுது கொல்லிகளில் இரையாகிப் போவதை நாம் உணரத் தவறிவிட்டோமா...?

பாடசாலையில் இருந்து திரும்பி வருகின்ற எமது மாணவர்கள் தொலைக்காட்சியின் தொடர்களைப் பார்த்தபடியே சாப்பிடுவதும் (சில சமயங்களில் சாப்பிடாமலே அவற்றை மட்டும் பார்த்த மகிழ்ச்சியினால் வயிறு நிரப்பிக்கொள்வதும்) பிரத்தியேக வகுப்புக்கள் முடிந்து திரும்பிய கையோடு மீண்டும் தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்து கொள்வதும் எத்தனை வீடுகளில் நிகழ்கின்றன? ~ தற்செயலாக தொடரொன்றின் ஒரு அங்கத்தை தவறவிடுகின்ற மகளோ மகனோ அம்மாவிடம் தவறவிட்ட அங்கத்தை ஆவலோடு கேட்டறிவதும் இன்று பல வீடுகளிலும் காணக்கூடிய சம்பவமாகிவிட்டது. சரிதான் ஒரு பொழுதுபோக்காக இடைக்கிடை பார்ப்பது அப்படியென்ன தீங்கை விளைவிக்கப்போகிறது என்று பலரும் அலட்சியமாக எண்ணிவிடக்கூடும் ~ கொஞ்சம் இருங்கள். அடுத்த தொடரிலாவது எமது வாழ்க்கைக்கு உதவக்கூடிய இயல்பான உண்மையான பயன்கள் கிடைக்கின்றனவா?

இல்லையே.......!

அத்தகைய தொடர்கள் பெரிதும் இன்றைய சினிமாக்கள் போலத்தானே அமைந்திருக்கின்றன.

பார்வையாளனை விறுவிறுப்பான நகர்வுடன் பிணைத்து ஒரு புதிய மாயை உலகத்தில் ஒத்திவைத்திருக்கும் கைங்கரியத்தைத்தானே இந்தத் தொடர்கள் செய்கின்றன. குடும்பத்தொடர் என்ற மகுடத்தோடு ஒளிபரப்பாகும் அவற்றில்கூட வாழ்வோடு ஒட்டாத சினிமாத்தனமான திருப்பங்களும் ~ அநியாயங்களும் ~ பழிவாங்கல்களும் ~ கொலைகளும் தானே இடம்பெறுகின்றன?

இவை யாருக்கு எந்த நன்மையைச் செய்துவிடக்கூடும் ~ 'பாவம' எம்மூர்க் குடும்பத்தலைவிகளும் அந்த கதாநாயகிகளுக்காகவும் அம்மாக்கள் அப்பாக்களுக் காகவும் உருகி ஏங்கி அனுதாபப்பட்டு வீணே தமது உடல்நிலைக்கு தீங்கு தேடிக்கொள்கிறார்கள்.

வாழ்வோடு ஒட்டாத இத்தகையதொடர்கள் ஒருபுற மென்றால் இன்னொரு புறத்தில் பேய்க்கதை சொல்லும் நிகழ்வுகள்.... பற்றிய தொடர்கள் ஆவிகளைக் காட்டிக்காட்டியே எமது பிஞ்சுகளின் பொன்னான பொழுதையும் வாழ்வையும் 'ஆவி'யாக்கி விடுவார்கள்போல இருக்கிறது.

இதையெல்லாம் பெரியவர்களான நாமும்தானே பார்க்க அனுமதிக்கிறோம். காலப்போக்கில் எமது பிஞ்சுகளை பிள்ளைகளை இத்தகைய விஷயங்கள் எப்படிப்பட்ட பிரஜைகளாக ஆக்கித்தரப் போகின்றன?

'சக்திமானுக்கு' ஏற்றவகையில் நேரசூசியை மாற்றித்தருமாறு ஆசிரியர்களைக் கோரும் மாணவமணிகளைப் பார்க்கிறோம். குழந்தைப்பிள்ளைகளுக்கான தொடர் என்று சொல்லிவிடுகின்றோம்.

சாகசங்கள் ~ அமானுஷ்யமான திறன் கொண்டவர்களின் சாதனைகள் ~ சீனியர் யூனியர் என்று அவர்களுக்குள்ளே வகைப்பாடு வேறு. இயல்பான அறிவோடு திறமையோடு வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளப் பயிற்றுவதற்கு பதிலாக நீ சோதனைகளில் வெற்றி பெற வேண்டுமானால் மந்திரசக்தியொன்றின் உதவியோடு பூதமொன்றை அழைத்து வானத்திலேறி மேகத்தில் பயணித்து.....

இப்படியே நாம் எமது குழந்தைகளை எங்கே கொண்டு போகப்போகிறோம். 24 மணிநேர மின்விநியோகம் எமது சிறார்களின் கல்வி விருத்திக்கா அல்லது பொழுது அழிக்கும் கலைகளில் தேர்ந்து வருவதற்கா?

கிடைத்துவருகிற கல்விப்பெறுபேறுகள் எமது பெற்றோரை உறுத்தவில்லையா?

அடுத்த வீட்டுக்கூரையில் பற்றிய தீ எமது வேலிக்குத்தாவ எத்தனை நேரமாகும்? ~பெற்றோர்களே..... விழித்துக்கொள்வீர்களா.....

கொஞ்சம் சிந்திப்போமா நாம் உண்மையில் எங்கே போகிறோம்?

- மீண்டும் காண்போம்-

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் 10ஆம் திகதி
# கிளிநொச்சியில் பெருமெடுப்பில் ஏற்பாடு சிங்கள மக்களும் கலந்துகொள்வர்!

(வவுனியா நிருபர்)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை எதிர்வரும் பத்தாம் திகதி மிகப்பெரியளவில் கிளிநொச்சியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த ஏற்பாடுகள் குறித்து வவுனியாவில் நேற்று இரவு நடந்த செயதியாளர் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறையினர் விளக்கமளித்தனர்.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் அலை, மகளிர் புகைப்படப்பிரிவுப் பொறுப்பாளர் கஜானி, வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

எதிர்வரும் 10ம் திகதி வட-கிழக்கின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தென்பகுதியிலிருந்தும் பெருமளவிலான பெண்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வுக்கு வரவுள்ளோரின் நன்மை கருதி மகளிர் அரசியல் துறையினர் விசேட போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வர்.

கிளிநொச்சியில் நடைபெறும் மகளிர் எழுச்சி நாள் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகளின் இராணுவ அணிவகுப்பு, விசேட படையணியின் வீரதீரச் செயல்கள், இராணுவச் சிறப்புக் கொமாண்டோக்களை மகளிர் படையணி சிதைத்த மன்னகுளத் தாக்குதல் குறித்த மாதிரி வடிவநிகழ்வு மற்றும் பல எழுச்சி நிகழ்வுகளும் இவ் எழுச்சி நாளில் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளில் புலிகளின் அன்பரசிப் படையணி, மாலதி படையணி, சோதியா படையணி, திலகா படையணி, சிறுத்தை மகளிர் படையணி, கடற்புலிகள் மகளிர் படையணி, குட்டி சிறி மோட்டார் படையணியின் பெண்கள் பிரிவு, விக்டர் கவச எதிர்ப்பு மகளிர் படையணி போன்ற படையணிகள் பங்கேற்கவுள்ளதாகவும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## முல்லைத்தீவிலிருந்து மூன்றாவது அணியாக
# 170 புலிகள் கடல் வழியாக கிழக்கிற்குப் பயணம்

(கொழும்பு)

முல்லைத்தீவிலிருந்து இன்று ஒரு தொகுதி விடுதலைப்புலிகள் கடல் வழியாக கிழக்கு மாகாணம் புறப்படவுள்ளனர். இவ்வணியில் 170 பேர் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் வழியாகக் கிழக்குப் பகுதிக்கும் வடக்கிற்கும் விடுதலைப் புலிகள் பயணம் செய்ய அரசு அனுமதி அளித்த பின்னர் நடைபெறும் புலிகளின் மூன்றாவது கடற் பயணமாக இது உள்ளது.

முல்லைத்தீவிலிருந்து காலையில் புறப்படும் இவ்வணியினர் மாலையளவில் கிழக்கின் வாகரைப் பகுதிக்கு வந்துசேர்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சம்பள ஆணைக்குழு அறிக்கை இன்று ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

திச தெவேந்திர சம்பள ஆணைக குழுவின் பூரணமான அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அந்த ஆணைக்குழு கையளிககும் வைபவம் இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியால் முன்னர் அமைக்கப்பட்டிருந்த இந்த ஆணைக்குழுவில் அமைச்சுச் செயலாளர்கள், முக்கிய கம்பனிப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பத்துப்பேர் இடம்பெற்றிருந்தனர். தொழிற்சங்கங்கள், தனிப்பட்ட அரசாங்க ஊழியர்கள், கல்விமான்கள், மூத்த நிர்வாகிகள் ஆகியோரிடமிருந்து பெற்ற சிபாரிசுகளின் அடிப்படையில் நாடாளாவிய ரீதியான ஆய்வுகளையடுத்து இந்த இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைமூலமாக அரசாங்க மற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு குறிப்பிடும்படியான ஒரு சம்பள அதிகரிப்பு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாயினும் அச்சிபார்சை நடைமுறைப்படுத்தக்கூடிய நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு சாதகமான சூழ்நிலை திறைசேரியில் இல்லை என்று சிரேஷ்ட நிதியியல் அதிகாரி ஒருவர் நமது ஈழநாட்டுக்கு தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலையில் சம்பள ஆணைக்குழுவிடமிருந்து இறுதி அறிக்கையைப் பெறும் ஜனாதிபதி அதனை அமுலாக்கம் செய்வதற்கு பிரதமரிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அது அவருக்கு அரசியல் ரீதியான நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று ஜனாதிபதியிடம் ஒரு பூரணமான இறுதிவடிவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும் தொடர்ந்தும் நிலவக்கூடிய சம்பள முரண்பாடுகளைக் களைவதற்கு திச தெவேந்திர தலைமையில் வேறு ஒரு குழு அமைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மண் அகழ்வு மண்கும்பானில் தொடர்கிறது

(புலோலி)

மண்கும்பான் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மண் அகழப்பட்டு வருகின்றது.

மண்கும்பான் பகுதியிலுள்ள சமதரையான நிலங்களிலிருந்து பகலிலும் மாலை வேளைகளிலும் மண் அகழப்பட்டு வருவதாகவும் இதனைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் முன்வராமையினால் மண் தொடர்ந்து அகழப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னர் இப்பகுதியில் மண் அகழ்வில் ஈடுபட்டவர்களை அப்பகுதி இளைஞர்கள் பிடித்து விடுதலைப்புலிகளின் தீவகப்பகுதி அரசியல்துறையினரிடம் ஒப்படைத்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். தற்போது மீண்டும் அதே நபர்களே மண் அகழ்வில் ஈடுபடுவதாகத் தெரியவருகின்றது. (15)

# ஜனாதிபதி குற்றச்சாட்டு ; எதிராக வழக்குத் தாக்கு

தனது மகனை றோயல் கல்லூரியில் சேர்ப்பதற்காக தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் லஞ்சம் வாங்கியதாக ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டை அவரே போதுமான ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும என பியகமவைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் இவ்வழக்கை தொடர்ந்துள்ளார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி அநுராதபுரத்தில் பொதுக்கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா, தமது மகனை றோயல் கல்லூரியில் சேர்ப்பதற்காக 25ஆயிரம் ரூபா லஞ்சம் கோரப்பட்டதாகவும் அவ்வேளையில் கல்வியமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே இருந்ததாகவும் கூறியிருந்தார்.

இதேசமயம் ஜனாதிபதி செயலகம விடுத்துள்ள அறிக்கையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு எந்த கருத்தினையும் தெரிவிக்கவில்லை என மறுப்பு வெளியிட்டுள்ளது.

## கைதிகளின்....

ணம் ஒன்றின் மூலமாக அடுத்த கட்டத்திற்கு நகரக்கூடிய சாத்தியம் உள்ளது என கொழும்பு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டவுடன் சட்டமாஅதிபர், தனக்குள்ள அதிகாரத்தின் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை மூடுவதற்கும் ஏனைய விடயங்களைத் தீர்மானிக்கவும் முடியும்.

தண்டனை வழங்கப்பட்ட கைதிகளைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி வழங்கக்கூடிய பொதுமன்னிப்பு மூலமாக அவர்களின் விடுதலை சாததியப்படும் ஆனால் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதி அமைச்சுப் பொறுப்புக்கள் ஜனாதிபதியிடம் இல்லை என்பதனால் பாதுகாப்பு அமைச்சரினதும் நீதி அமைச்சரினதும் சிபாரிசுகளின் அடிப்படையில் அவர் முடிவுகளை எடுக்கமுடியும். ஆனால் மேற்படி அமைச்சர்களின் சிபாரிசு களை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவாரா என்று சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ் மாறன் வினாவெழுப்பினார்.

## காங்கேசன் கடற்பரப்பில்
# திசை தவறிச்சென்ற மீனவர் கடற்படையால் தாக்கப்பட்டார்!

(வடமராட்சி)

காங்கேசன்துறை கடற்பரப்பினுள் நுழைந்ததாக கூறப்படும் இரண்டு மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சுப்பர்மடம் பகுதியிலிருந்து கடந்த முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்கு கடலுக்குச் சென்ற மீனவர்களே கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

திசைமாறி காங்கேசன்துறை கடற்பரப்புக்குள் நுழைந்ததால் கடற்படையினர் தமது படகில் மீனவர்களை ஏற்றி கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து சுப்பர் மடத்தில் வசிக்கும் ஆ.சிவகரன் வயது 24, கோ.ரவிக்குமார் வயது 24, ஆகியோரே தாக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களாவர்.

தாம் தாக்கியதை வெளியில் யாருக்கும் சொல்லக்கூடாது எனத் தம்மைக் கடற்படையினர் எச்சரித்ததாகவும், காங்கேசன்துறையில் இருந்து 16 கி.மீற்றருக்கு அப்பாலேயே இனி மீன்பிடிக்க வேண்டுமென்று தெரிவித்ததாகவும் தாக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்படையினர் தம்மைத் தாக்கியது தொடர்பாக மீனவர்கள் இருவரும் கடற்றொழிலாளர் சங்கத்திடமும், வல்வெட்டித்துறையில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திலும் முறையிட்டுள்ளனர். (23)

## விபரம் சமர்ப்பிப்பு

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தில் பணிபுரியும் ஊழியர் விபரங்களைப் படையினர் திரட்டியுள்ளனர்

படை அதிகாரிகளால் ப.நோ. கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் விபரங்கள் கேரப்பட்டிருந்தது இதையடுத்தே கூட்டுறவுச் சங்கம் தமது பணிமனையில் கடமையாற்றும் ஊழியர்களின் விபரத்தை நேற்று படையினரிடம் சமர்ப்பித்துள்ளது

ப.நோ.கூட்டுறவுச் சங்கம் சமீபத்தில் தான் உயர் பாதுகாப்பு வலயத்திக்குள் தனது தலைமையகத்தை இடம் மாற்றியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (23)

## புலிகளின்...

வரவுள்ளனர்.

தமது விஜயத்தின் அடிப்படையிலான ஆராய்வுகளின்பேரில் - இவர்கள் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் ஈழத்தமிழர்களைத் திருப்பியனுப்புவதற்கான சூழல் இங்கு ஏற்பட்டிருக்கிறதா என்பதைத் தீர்மானிப்பார்கள் எனவும் தெரியவருகின்றது.

## பள்ளி ....

வர்களின் துணையுடன் மாணவி பாதுகாப்பாக வீடு திரும்பிவிட்டார். இவ்விடயம் தொடர்பாகப் பாடசாலை அதிபருக்கு தெரியப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட பாடசாலை அதிபர் இவ்விடயம் குறித்து நேற்று யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## ஆயுதங்களை...

ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என ஜனாதிபதி கருதுவதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் - வில்கம் விகாரையில் ஏழு படையினர் புலிகளால் கைதான விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தமக்கு முழுமையான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா அவரை கோரியிருப்பதாகவும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பின் போது ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# பொலீஸாரின் கெடுபிடி குறைக்கப்பட வேண்டும்
## ஆசிய சட்டமூலவள நிலையம்

(கிளிநொச்சி)

இலங்கையில் பொலிஸார் தமது சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்ட ஆசிய சட்ட மூலவள நிலையம் கேட்டுள்ளது.

1994 இற்கு பின்பே பொலிஸாரின் கெடுபிடிகள் மோசமாகியிருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கும் இந்நிலையம் இது தொடர்பாக உள்துறை அமைச்சருக்கு இரண்டு சிபார்சுகளையும் வழங்கியுள்ளது.

சமாதானச் சூழல் காணப்படும் இவ்வேளையில் பொலிஸார் தமது கெடுபிடிகளை முழுமையாக கைவிடவேண்டும் சித்திர வதைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க அரசு முன்வர வேண்டும் ஆகியவையே ஆசிய சட்ட மூலவள நிலையம் முன்வைத்துள்ள சிபார்சுகளாகும்.

இத்தகைய சிபார்சுகளை முழுமையாக அரசு அமுலாக்கும் போதே சமாதான சூழ்நிலை அர்த்தமுள்ளதாகும் என அந்நிலையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## காரைநகர்....

இதேபோல் - காரைநகர் பகுதிகளில் 15வருடமாக மூடப்பட்டிருந்த பொன்னாலைச் சந்தியிலிருந்து பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்குச் செல்லும் வீதி, தோப்புக்காட்டிலிருந்து காரைநகர் துறைமுகத்துக்குச் செல்லும் வீதி, காரைநகர் சுற்று வீதி என்பன இன்று முதல் மகள் பாவனைக்குத் திறந்து விடப்படவுள்ளன.

காரைநகர் துறைமுகத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கான படகுச் சேவையை இன்று முதல் கடற்படை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கும்.

காரைநகர் துறைமுகத்திலிருந்து இன்று முதல் யாழ். குடாநாட்டுக்கான பஸ் சேவைகள் நடாத்தப்படும்.

காரைநகர் கடற்படைத் தளத்தினுள் இருக்கும் ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில், கிட்டங்கிப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றுக்கு பூசைகள் செய்யவும் புனருத்தாரணம் மேற்கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

வன்னியிலிருந்து மீளத்திரும்பும் கடற்றொழிலாளருக்கு வழங்கப்படாதிருந்த கடற்றொழில் செய்வதற்கான 'பாஸ்' - உதவி அரசாங்க அதிபர், கடற்றொழிலாளர் சங்கத்தின் கடிதங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெறமுடியும்.

மேற்குறித்த முடிவுகளுக்கு கடற்படை உறுதியளித்திருப்பதாக அமைச்சர் மகேஸ்வரன் கூறினார்.

இச்சந்திப்புக்களில் வடபிராந்தியக் கடற்படைத் தளபதியுடன் - காரைநகர், மண்டைதீவு கடற்படை முகாம்களின் உயரதிகாரிகளும் மூளாய் படை முகாம் அதிகாரியும் உடனிருந்தனர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 95.94 | 96.48 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.57 | 150.93 |
| 1யூரோ | 93.87 | 94.92 |
| 1சுவிஸ் பிராங் | 51.32 | 51.93 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 51.78 | 52.60 |
| 1ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1சவூதி றியால் | 25.[illegible] | 25.66 |

... முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03-10-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.